
# மாமனார் சரணாகதி

COMICS PDF TIMES
HSC

வர்ணா



COMICS PDF TIMES
HSC

# மாமனார் சரணாகதி

## நாடகப் பாத்திரங்கள்

1. நன்னிலம் வாஞ்சிநாதன் - குடும்பத்தலைவர்
2. சுகுமார் - சகோதரியின் மகன் - மாப்பிள்ளை
3. கௌரி - முதல் மகள்
4. உமா - இரண்டாவது மகள்
5. நாகராஜ ராவ் - குடித்தனக்காரர்
6. குடைநாயுடு - குடும்ப நண்பர்
7. அபிராமி - சகோதரி
8. கல்யாணராமன் - அபிராமியின் கணவர்
9. தேரழுந்தூர் ஜயராமன் - சம்பந்தி
10. சுரேஷ்-ஜயராமனின் மகன்
11. பிரசாத்-ஜயராமனின் மைத்துனன்

12, 13. சுந்தர் - நந்தா - ஜோக்கர்கள்

14. நடுக்காவேரி சுவாமிகள்
15. ஆச்ரமப் பையன்

NOT FOR SALE
FAN MADE ONLY

# மாமனார் சரணாகதி

## காட்சி-1

## வாஞ்சிநாதன் வீடு

(நந்தாவும் சுந்தாவும் மெள்ள வீட்டுக்குள் வருகிறார்கள். இவர்களைப் பார்த்துவிட்டு உள்ளே இருக்கும் நாய் குரைக்கிறது.)

**சுந்தா** : நாய் குரைக்கிற சத்தம் கேக்குது, ஆனா நாயைக் காணோமே!

**நந்தா** : பக்கத்து வீட்டு நாயா இருக்கும். இந்த வீட்டுலே நாய் இருந்தா 'நாய்கள் ஜாக்கிரதை'ன்னு வெளியே போர்டு இருக்கும்! தைரியமா போ.

**சுந்தா** : ஐயையோ நாய் இங்கே இருக்குடா!

**நந்தா** : பயப்படாதே. அதை கட்டித்தான் போட்டுருக் காங்க.

**சுந்தா** : அறுத்துண்டு வந்து கடிச்சுதுன்னா!

**நந்தா** : அறுத்திகிட்டு வந்தாலும், இந்த நாய் கடிக்காது.

**சுந்தா** : எப்படி இத்தனை நிச்சயமா சொல்றே! உனக்கு இந்த நாயைத் தெரியுமா?

COMICS PDF TIMES

நந்தா : நாயைத் தெரியாது. ஆனா பழமொழி தெரியும். குரைக்கிற நாய் கடிக்காது. இந்தப் பழமொழி உனக்குத் தெரியாதா!

சுந்தா : எனக்குத் தெரியும். இந்த நாய்க்குத் தெரியணுமே.

நந்தா : நாய்க்கு பழமொழி தெரியுமா தெரியாதான்னு டெஸ்ட் பண்ணி பார்த்துடலாம். தைரியமா வா.

சுந்தா : அதை எப்படி கண்டுபிடிக்கிறது?

நந்தா : சிம்பிள். நேரா நாய்கிட்ட போ, அது உன்னை கடிக்காம வாலை ஆட்டிக்கிட்டு கிட்டே வந்துதுன்னா, அதுக்குப் பழமொழி தெரியும்னு அர்த்தம்.

சுந்தா : கடிச்சுதுன்னா?

நந்தா : அதுக்குப் பழமொழி தெரியாதுன்னு அர்த்தம்! போய்யா. (தள்ளுகிறான்)

சுந்தா : ஐயயோ! நீ மொதல்ல போ. நான் பின்னாலே வரேன்.

(நாய் குரைக்கிறது. ''ஜிம்மி'' என்று அதை வாஞ்சிநாதன் அடக்கும் குரல் கேட்கிறது)

(வாஞ்சிநாதன் வருகிறார்)

வாஞ்சி: யார்ரா நீங்க, திறந்த வீட்ல நுழையறது?

சுந்தா : சுந்தா - நந்தா.

வாஞ்சி : சுந்தா - நந்தாவா? ஆடிட்டர் கம்பெனி மாதிரி பேர் வெச்சுகிட்டிருக்கீங்க?

நந்தா : எங்களைப் பார்த்தா ஆடிட்டர்ஸ் மாதிரியா இருக்கு?

வாஞ்சி : இல்லே, காஷ்மீர் டெரரிஸ்ட் மாதிரி இருக்கு. வீட்டுக்குள்ள வந்து என்ன நோட்டம் விட்டுக்கிட்டிருக்கீங்க...

நந்தா : சுகுமார்ங்ரவரைப் பார்க்கணும்...

வாஞ்சி: அவரை எதுக்கு நீங்க பார்க்கணும்? நீங்க யாருன்னு இப்ப சொல்லலேன்னா நாயை அவிழ்த்து விட்டுடுவேன்.

நந்தா : அது முழிக்கிற முழியைப் பார்க்கவே பயங்கரமாயிருக்கு. மொதல்லே அவிழ்த்து விட்டுடுங்க சார். அது எங்கேயாவது போகட்டும்.

வாஞ்சி : வேறே எங்கேயும் போகாது. நேரே உங்க கழுத்துக்குத்தான் வரும். வேணும்னா பார்க்கறேளா?

(திரும்புகிறார்)

(சுகுமார் வருகிறார்)

சுகுமார் : என்னைத் தேடிண்டு வந்தவாளை எதுக்கு மாமா பயமுறுத்திண்டிருக்கேள்?

வாஞ்சி: இவாளைப் பார்த்தா பயங்கரவாதிகளைப் போல இருக்கு. பைலே வெடிகுண்டும், ஸ்டென் கன்னும் ஒளிச்சு வெச்சுண்டிருக்காளோன்னு சந்தேகமாயிருக்கு... ஆயுதங்களை சரண்டர் பண்ணினப்புறம் பேச்சு வார்த்தை நடத்து, ஜாக்கிரதை. (உள்ளே போகிறார்)

COMICSPDF TIMES

சுகுமார்: தப்பா நினைச்சுக்காதீங்க... எங்க மாமா ஒரு மாதிரி. பொறுமையே கிடையாது. யாரா யிருந்தாலும் எடுத்தெறிஞ்சு பேசிடுவார்...

நந்தா : தினம் நாங்க இது மாதிரி நிறைய கேரக்டர்களைப் பார்க்கிறோம். எங்களுக்கு இதெல்லாம் ரொம்ப பழக்கம். இதுக்கெல்லாம் கோபப்பட்டா பொழப்பு நடக்குமா? நீங்கதானே சுகுமார்ங் கிறது?

சுகுமார்: ஆமா... நீங்கதானே நந்தா- சுந்தா?

சுந்தா : இல்லே, சுந்தா நந்தா... !

நந்தா : உங்க வீட்லே ஏதோ கல்யாணம் வருதாமே.

சுகுமார்: ஆமா, என் மச்சினிக்கு கல்யாணம்.

சுந்தா : ரிசப்ஷனுக்கு எங்க கச்சேரியை வைக்கலாம்னு உங்க ஆபீஸ் நாகரத்தினம் உங்ககிட்டே சஜஸ்ட் பண்ணினாரே... அவர்தான் உங்களைப் பார்க்கும்படி சொல்லி அனுப்பிச்சார்...
(வாஞ்சிநாதன் வருகிறார்)

வாஞ்சி: என்னது, இவா பாடகர்களா? எந்த ஊர் பிரதர்ஸ்? நாகர்கோயில் சகோதரர்களா, இல்லை நங்கநல்லூர் சகோதரர்களா?

நந்தா : நாங்க பாட்டுக்கச்சேரி பிரதர்ஸ் இல்லே! ஜோக்கர்ஸ்.

வாஞ்சி: ஓகோ, சீட்டுக்கச்சேரி ஜோக்கர்ஸா? ரம்மி விளையாட வந்தேளா...?

சுந்தா :இல்லே சார், நாங்க ஜோக்ஸ் கச்சேரி செய்யும் நகைச்சுவை கலைஞர்கள். இந்தப் பை நிறைய ஜோக்ஸ் இருக்கு.

நந்தா :ரெண்டு மணி நேரம் ஜோக்ஸ் கச்சேரி செய்வோம்...

வாஞ்சி:ஓ, ஆடு, மாடு, நாய், பூனை, காக்கா, கோழி மாதிரியெல்லாம் கத்தி மிமிக்ரி பண்றவங்களா?

நந்தா :சீச்சீ! இது நாங்களாகவே கண்டு பிடிச்ச புத்தம் புது ஐடியா. முக்கியமா கல்யாண ரிசப்ஷன்லே எங்க கச்சேரியை ரொம்ப ரசிக்கிறாங்க. கல்யாண ரிசப்ஷன்லே பாட்டுக்கச்சேரி, வாத்தியக் கச்சேரியெல்லாம் வெக்கறது சுத்த வேஸ்ட். ஜாலியா சிரிச்சுப்பேசி, அரட்டை அடிக்க வரவங்களை, சபா மெம்பர்ஸ் மாதிரி கட்டிப் போட்டு, 'கச்சேரியை கேளுங்க'ன்னா எவன் கேட்பான்? அதுக்குப் பதிலா மாத்தி மாத்தி ஜோக்ஸ் சொல்லிகிட்டிருந்தா கேட்டு ரசிக் கிறாங்க. அதைத் தவிர சின்னப் பசங்களுக்குன்னு அறுவை ஜோக்ஸ் ஆயிரக் கணக்குலே வெச்சிருக்கோம்...

சுந்தா :மொத்தத்துலே ரிசப்ஷன் தூளாயிருக்கும்! இவரு மச்சினி கல்யாணத்துலே எங்க ப்ரோக்ராம் நடக்கப் போவுது. கட்டாயம் வந்து கேளுங்க... 'டாப்பா'யிருக்கும்.

வாஞ்சி:என்னது, என் பொண்ணு கல்யாணத்துக்கு வரச் சொல்லி நீ என்னையே அழைக்கிறயா?

COMICS PDF TIMES

சுந்தா :என்னது! இவருடைய மச்சினி, உங்க பொண்ணா?... அப்படின்னா...

வாஞ்சி:இவர் என்னோட மாப்பிள்ளை! இதைக் கூட கண்டு பிடிக்க முடியலையா, அதிமேதாவிதான் போ!

சுகுமார்:இன்னொரு உறவுகூட, இவர் எனக்கு மாமா. அதாவது எங்கம்மாவோட அண்ணன்!

நந்தா :ஓஹோ, மாமங்காரனே மாமனாராயிட்டீங்களா? அப்படின்னா நான் ஒரு புதிர் போடறேன். கண்டு பிடிக்கறீங்களா?

வாஞ்சி:என் பேத்தியைக் கூப்பிடறேன்! அவகிட்ட விடுகதை, புதிர் எல்லாம் போடுங்க. போங்கடா போக்கத்தவனுங்களா!

சுந்தா :குழந்தைக்கு இந்தப் புதிர் புரியாது. நீங்களே சொல்லுங்க.

நந்தா :கவனமா கேட்டுக்குங்க... என்னோட மாமனார் என் பொண்ணுக்கு மாமனார். என் பொண்ணுக்கு நாத்தனார், எனக்குப் பொண்டாட்டி. அப்படின்னா என் மச்சினன் பெண்டாட்டி எனக்கு என்ன உறவு?

(வாஞ்சிநாதன் தலையை சொறிகிறார்.)

நந்தா :தெரியலையா... கிணத்துலே கல் விழுந்துடுச்சா?

சுந்தா :பாறாங்கல்லே விழுந்துடுத்து!

நந்தா :நான் ஆன்ஸர் சொல்றேன். என் மச்சினன் பெண்டாட்டி எனக்குப் பொண்ணு!

சுந்தா :விளக்கமா சொல்லுப்பா. பெரியவர் முழிக்கிறார், பாவம்.

சுந்தா :என் பொண்ணு அவ மாமனையே கல்யாணம் செஞ்சுகிட்டா. அதாவது என் மச்சினனையே கட்டி கிட்டா. அதனாலே தான் சொன்னேன் என் மச்சினன் பொண்டாட்டி என் பொண்ணுன்னு... இப்பவாவது புரியுதா? (வாஞ்சி விழிக்கிறார்)

சுந்தா :எங்க மேலேயா நாயை அவுத்து விடறீங்க. தலையைப் பிச்சிக்கிட்டு தவிங்க.

(திரை)

### காட்சி-2

## வாஞ்சிநாதன் வீடு

(வாஞ்சிநாதனின் பெண்கள் கௌரியும் உமாவும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.)

கௌரி :அப்பா பண்றது ரொம்ப அநியாயமா இருக்கு உமா. கல்யாணத்துக்கு நம்ம அத்தையைப் போய் நேர்லே கூப்பிடக்கூடாதுங்கிறாரே, என்ன அர்த்தம்? கூப்பிட்டுத்தான் ஆகணும்னு நீ அடம் பிடி... நீ சொன்னாதான் கேட்பார் அவர்.

உமா :ஐயோ, எனக்கேண்டிம்மா வம்பு? கல்யாணத்தைப் பத்தி பேச்செடுத்தாலே 'வள்' 'வள்'னு விழறார். நான் எதுலேயும் தலையிடப்போறதில்லே. கல்யாணத்துக்கு யாரை வேணுமானாலும் கூப்பிடட்டும், யார் வேணுமானாலும் வரட்டும், 'ஐ டோண்ட் கேர்!'

COMICSPDF TIMES

கௌரி : ஓஹோ நான் பாட்டுக்கு கல்யாணத்தை பண்ணிண்டு அந்த வீட்டுக்குப் போய் சேர்றேங்கிறயா? நீ அப்பாகிட்டேருந்து தப்பிச்சுண்டு ஓடிப்போயிடப் போறே. என் தலையெழுத்து இவர்கிட்டே மாட்டிண்டு ஆயுசு பூரா அவஸ்தைப் பட்டாகணும்...

(வாஞ்சிநாதன் வருகிறார்)

வாஞ்சி: கல்யாணத்தைப் பத்தி அக்காளும் தங்கையுமா என்ன மந்திராலோசனை நடத்திண்டிருக்கேள்?

கௌரி: மந்திராலோசனையும் இல்லே, தந்திரா லோசனையும் இல்லே. எங்களுக்கிருக்கிறது ஒரே ஒரு அத்தை. அவளை நேர்லே போய் அழைச்சுட்டு வராட்டா நன்னா யிருக்குமான்னு பேசிண்டிருக்கோம்.

வாஞ்சி: நானும் பாத்திண்டிருக்கேன். இத்தனை வருஷமா இல்லாம இப்ப என்ன திடீர்னு மாமியார் மேலே கரிசனம் பொறந்துடுத்து உனக்கு?

கௌரி: சொந்த அம்மாவைப் போய் அழைக்க முடியலேன்னு உங்க மாப்பிள்ளை எவ்வளவு ஃபீல் பண்ணறார் தெரியுமா? அவர் மனசு கஷ்டப்படறதைப் பார்த்தா எனக்கு ரொம்ப வேதனையா இருக்கு.

வாஞ்சி: என் ஃபீலிங்கைப் பத்தி இங்கே யாருக்காவது அக்கறையிருக்கா? அண்ணன்னு கூட என்னை மதிக்காம, எங்கிட்டே ஒரு வார்த்தை கூடசொல்லாம, குடும்பத்தை விட்டுட்டு

எங்கேயோயிருக்கிற நடுக்காவேரி ஆசிரமத்திலே போய் உட்கார்ந்திண்டு இருக்கிறவளை நீங்க எதுக்கு அத்தை அத்தைன்னு உறவு கொண்டாடிண்டிருக்கேள்?

**கௌரி:** சரி, எங்க ரெண்டு பேருக்கும் அத்தை வேண்டாம்... எனக்கு மாமியார் வேண்டாம். ஆனா என் புருஷனுக்கு அம்மா வேண்டாம்னு நீங்க எப்படி சொல்ல முடியும்? பெத்தவளாச்சே, மனசு கேக்குமா?

**வாஞ்சி:** உனக்கு புத்தி கித்தி, சூடு சொரணை ஏதாவது இருக்கா இல்லியா? தன் கல்யாணத்துக்கு ஆச்ரமத்துக்கு போய் அம்மாவை நேரே கூப்பிட்டுவிட்டு வந்தானே... அவ வந்தாளா? பிள்ளைங்கிற பாசமே இல்லாதவளை இவன் மட்டும் எதுக்கு கட்டிண்டு அழுதுண்டிருக்கணும்? அதுக்கு நீ வேறே சப்போர்ட் பண்றே... வேணுமானா ஒரு இன்விடேஷனைப் போஸ்ட் பண்ணிட்டு, வாயை மூடிண்டிருங்கோ. சொந்த பிள்ளையோ, இரவல் பிள்ளையோ, என் வீட்டிலே இருக்கிறவரைக்கும் என் இஷ்டப்படி தான் நடக்கணும்... உமா, உங்க ஆபிஸ்ல எத்தனை இன்விடேஷன் குடுக்கப்போறே?

**உமா:** இருபது இருபத்தைஞ்சு குடுக்கறதா இருக்கேம்ப்பா...

**வாஞ்சி:** எதுக்கு இவ்வளோ! முக்கியமா பத்து பதினைஞ்சு பேருக்கு குடுத்தா போறுமே? அட்டண்டர்ஸ்,

வாட்ச்மேன், ஸ்கேவெஞ்சர்ஸ்னு கண்லே படறவாளுக்கெல்லாம் குடுக்கவேண்டாம்.

உமா : நான் ஒத்தரையும் கூப்பிடலேப்பா, போறுமா?

(கோபத்துடன் ஆபீசுக்கு போகிறாள்.)

(சுஜாதா வருகிறாள்)

சுஜாதா: அம்மா, என் பிரண்ட்ஸ் அஞ்சுவுக்கும், ரஞ்சிக்கும் கல்யாண இன்விடேஷன் குடுக்கப் போறேன்.

கௌரி: தாத்தா கொன்னுடுவார். இப்படிக் கொண்டா அதை...

(அதைப் பிடுங்கி மேஜை மேல் வைத்து விட்டுப் போகிறாள்)

சுஜாதா: தாத்தா, நான் ஃபிரெண்ட்ஸூக்கு இன்விடேஷன் குடுத்தா கொன்னுடுவேளா?

வாஞ்சி: மாட்டேண்டா கண்ணு.

சுஜாதா: தாங்க்ஸ் தாத்தா.

(எடுத்துக் கொண்டு ஓடிப் போகிறாள்)

(சுகுமார் வெளியேயிருந்து வருகிறான்)

வாஞ்சி: சுகுமார், தேரழுந்தூர் ஜெயராமன் மொத்தம் எத்தனை இன்விடேஷன் குடுக்கப் போறானாம்... ?

சுகுமார்: மொத்தம் எண்ணூறு போட்டாராம். வெளியூருக்கு ஐம்பது. மீதி எழுநூத்தம்பது உள்ளூருக்கு.

வாஞ்சி: *யாரைக் கேட்டுண்டு இத்தனை இன்விடேஷன் வாரி விட்டிருக்கான்? நான் கேட்டப்போ சாப்பாட்டுக்கு நூறு நூத்தம்பது பேருக்கு மேலே வரமாட்டான்னு சொன்னானே... அயோக்கியன்! நாங்க மடத்துசிஷ்யா, கைலே பைசா வாங்க மாட்டோம்ங்கிறது... சத்திரம், சோறு, வீடியோ, ரிசப்ஷென்னு கல்யாணச் செலவை ஏத்திண்டேபோறது... இவன் சின்ன மாமனார் பிரஸ் வெச்சிருக்கானோ இல்லியோ ஃபிரியா இன்விடேஷன் அடிச்சுக் கொடுத்திருப்பார்... புடவைக் கடை பிட் நோட்டீஸ் மாதிரி, இதை தெருவுக்குத் தெரு, சந்துக்குச் சந்து வாரி விட்டிருக்கான். அத்தனையும் சோத்துக்கு வந்து ஒக்காந்தா நான் போண்டியாக வேண்டியதுதான். இவன் பொண்ணுக்கு கல்யாணம் பண்றச்சே அவசியம் குடுக்கணுமா வேண்டாமான்னு பார்த்துப் பார்த்துக் குடுத்தானே... பிள்ளைக் கல்யாணம்னா என்ன தாராளம் பார்த்தியா? ஓசிப்பய! இது மாதிரி பயல்களுக்கு ஒண்ணு பண்ணணும்... சாப்பாட்டுச் செலவை ரெண்டு பேரும் பங்கு போட்டுக்கற மாதிரி ஒரு சிஸ்டம் கொண்டு வரணும். ஒரு எலைக்கு இத்தனை ரூபான்னு ஃபிக்ஸ் பண்ணி பொண்ணு வீட்டுக்காரா கெஸ்ட், பிள்ளை வீட்டுக்காரா கெஸ்ட்ஸ்னு தனித் தனிப் பந்தியா போட்டு சம்பந்தி பந்தியிலே எத்தனைப் பேர் சாப்பிட்டான்னு எண்ணிப் பார்த்து அந்தப் பணத்தை அவாகிட்டேருந்து வசூல்*

பண்ணினாதான் புத்தி வரும். இரு, இரு, ஜெயராமன் சொன்ன கணக்குக்கு மேலே சோத்துக்கு கும்பல் வரட்டும். ரயில்வே ஸ்டேஷன்லே பண்ற மாதிரி சாம்பார்சாதம், தயிர் சாதம்னு பொட்டலமா கட்டி கைலே குடுத்தனுப்பறேன்... ஆமா, நீ ஜயராமன் கிட்டே போய் ரிசப்ஷன் வெக்கறோம்னு ஏன் 'கமிட்' பண்ணிண்டு வந்தே? நான் சொன்னேனா?

**சுகுமார்:** நான் 'கமிட்' பண்ணிக்கலே மாமா. 'ரிசப்ஷன் வெக்கணும்னு உன் மாமனார்கிட்டே அடிச்சு சொல்லியிருக்கேன். என்ன ஏற்பாடு பண்ணப் போறார்'னு ஜெயராமன் கேட்டார்.

**வாஞ்சி:** அவன் அடிச்சு சொன்னப்ப நான் உதைச்சு மாட்டேன்னேனே. அதுக்கப்புறம் உன்கிட்டே எதுக்கு ரிசப்ஷன் பத்தி பேசறான் அந்த அநாகரீகப்பய?

**கௌரி:** கல்யாணம்னா லேசா? தட்டிக் கேக்கறதுக்கு சம்பந்தி யாருமில்லேன்னு என் கல்யாணத்தை சீப்பா நடத்தினேளே, அது மாதிரி உமா கல்யாணத்தையும் நடத்தலாம்னு பார்க்கறேளா! ஜெயராமன் விடமாட்டார். கண்லே விரலை விட்டு ஆட்டிடுவார்.

**வாஞ்சி:** நான் மூக்குலே கடப்பாறையை விட்டு ஆட்டுவேன்!... (கௌரி உள்ளே போகிறாள்) சுகுமாரா, அநாவசியமா இந்தக் கல்யாணத்திலே தலையிட்டு நாட்டாமை பண்ணாதே... மூத்த

COMICS PDF TIMES

மாப்பிள்ளைங்கிற தோரணையெல்லாம் வெச்சுக்காதே தெரிஞ்சுதா... ரிசப்ஷனுக்கு அந்த காஷ்மீர் டெரரிஸ்ட் பசங்களோட ஜோக் கச்சேரியை ஏற்பாடு பண்ணியோ, அவாளை மேடையிலேயே சுட்டுத் தள்ளிடுவேன்!

*(பிரசாத் என்கிற பையனுடன் சுந்தா-நந்தா வருகிறார்கள்)*

**வாஞ்சி:** மறுபடியும் நீங்க எதுக்கு இங்கே வந்தீங்க?

**நந்தா** : நாங்களா வரலே... இந்தத் தெருவுலே வந்துகிட்டிருந்தோம். இவரு உங்க வீட்டு அட்ரஸ் கேட்டார். அழைச்சுகிட்டு வந்தோம்.

**வாஞ்சி:** திருக்கழுக்குன்றம் கழுகுகள் மாதிரி எதுக்கு ரெண்டு பேரும் இந்த வட்டாரத்திலேயே வட்டமிட்டுகிட்டிருக்கீங்க? நீ யார்ரா அம்பி?

**பிரசாத்:** என் பேரு பிரசாத். தாம்பரம் ஜெயராம ஐயரோட கடைசி மச்சினன். கல்யாண ரிசப்ஷனுக்கு யாரோ சுவாமி சுந்தா நந்தாவோட ஜோக் கச்சேரி ஏற்பாடு பண்ணியிருக்காராம். சொல்லிட்டு வரச் சொன்னார்.

**வாஞ்சி:** என்ன சுந்தானந்த சுவாமிகள் ஜோக் கச்சேரி பண்ணப் போறாரா?

*(சுந்தா - நந்தா சிரிக்கிறார்கள்)*

**சுகு** : சுவாமி சுந்தானந்தா இல்லே, சுந்தா அண்டு நந்தாங்கறது இவாதான்.

**பிரசாத்** : அப்படியா? இது எதிர்பாராத சந்திப்பு, பழம் நழுவி பால்லே விழுந்த மாதிரி.

வாஞ்சி: அதை வழிச்சு முழுங்கு! டேய், பையா, உங்க் அத்திம்பேர்கிட்டே போய் சொல்லு, இவா உளறல் க்ச்சேரியை வெச்சா அவர்தான் சில்லரை குடுக்கணும். நான் பைசா குடுக்க மாட்டேன். ரிசப்ஷனுக்கே வரமாட்டேன்; வந்தாலும் சிரிக்க மாட்டேன். கண்டிப்பா சொல்லிடு.

பிரசாத்: கட்டாயம் சொல்றேன்.

வாஞ்சி: அப்ப நீ போயிட்டு வா.

பிரசாத்: ஒரு மூணு ரூபா இருந்தா குடுங்கோ... கல்யாணச் செலவோட செலவா இருக்கட்டும்!

வாஞ்சி: ஜெயராமனுக்கு அழறது போறாதுன்னு, நான் அவன் கடைசி மச்சினனுக்கு வேறே அழணுமா?

பிரசாத்: நீங்க அழவும் வேண்டாம், சிரிக்கவும் வேண்டாம். நான் திரும்பப் போக ரயில் சார்ஜுக்கு கைலே பணமில்லே. அதான் கேட்டேன். வரபோது என் பர்ஸை எவனோ ஒருத்தன் பிக்பாக்கெட் அடிச்சுட்டான்.

வாஞ்சி: அதை நான் எப்படி நம்பறது?

பிரசாத்: பாக்கெட்லே பர்ஸ் இல்லே பாருங்களேன்.

வாஞ்சி: என் பாக்கெட்ல கூடத்தான் பர்ஸ் இல்லே. அதனாலே எவனோ பிக்பாக்கெட் அடிச்சுட்டான்னு அர்த்தமா?

(சுந்தா-நந்தா சிரிக்கிறார்கள்)

சுந்தா: நந்தா! இந்த ஜோக்கை நாம் அமுக்கிடுவோம். ரிசப்ஷன்லே நம்ம பழைய ஜோக்குகளோட

மறக்காம இந்தப் பிக்பாக்கெட் ஜோக்கையும் அடிக்கணும்.

**வாஞ்சி:** கட்டையாலேயே அடிப்பேன்! அன்னிக்கு அந்த சத்திரம் இருக்கிற ரோடுலேயே உங்களை நுழையவிடாம போலீஸ் கமிஷனர்கிட்டே சொல்லி போலீஸ் காவல் போடறேனா இல்லையா பாரு.

(திரை)

## காட்சி-3

## வாஞ்சிநாதன் வீடு

(கௌரியும் சுகுமாரும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்)

**கௌரி:** இதோ பாருங்கோ, ரொம்ப நாளா உங்ககிட்டே ஒரு விஷயம் சொல்லணும்னு இருக்கேன். அப்பா உங்களை கேவலமாக நடத்தறதும், வாய்லே வந்தபடி திட்டறதும், எனக்கு மனசுக்கு ரொம்ப கஷ்டமாயிருக்கு...

**சுகு:** உங்கப்பா பேசறது புதுசா என்ன? சின்ன வயசுலேருந்து என்கிட்டே இப்படித் தானே இருக்கார்.

**கௌரி:** இத்தனை நாள் அவர் பேச்செல்லாம் வீட்டோட இருந்தது. இப்ப நமக்கு சம்பந்தி வந்துட்டார். உங்களுக்கு ஷட்டகர் வந்துட்டார். சுஜாதாவுக்கும் வயசாயிண்டு வரது. மாமனார் மாப்பிள்ளையை அதிகாரம் பண்றது பார்க்கவோ கேட்கவோ

நன்னாயிருக்காது. உமா கல்யாணத்துல உங்களை அத்தனை பேர் எதிர்லேயும் என்னமோ வேலைக்காரன் மாதிரி ட்ரீட் பண்ணினப்போ, எனக்கு அவமானத்திலே அழுகையே வந்துடுத்து, தெரியுமா...

சுகு: இதையெல்லாம் போய் பெரிசா எடுத்துக்காதே. அப்பாவும் அம்மாவும் என்னைத் தனியா விட்டுட்டு போயிட்டப்புறம் என்னை வளர்த்து ஆளாக்கினவர்க்கு இந்த உரிமை கூடவா இருக்கக் கூடாது?

கௌரி: எவ்வளவு சொன்னாலும் உங்களுக்கு ரோஷம் பொறக்க போறதில்லே. அப்பாவுக்கும் புத்திவரப் போறதில்லை.

(வாஞ்சிநாதன் வருகிறார்)

வாஞ்சி: சுகுமாரா, உனக்கு எத்தனை தரம் சொன்னாலும் புத்தி வரப்போறதில்லே...

சுகு : என்ன மாமா?

வாஞ்சி: இதோ பாரு, கல்யாணச் செலவை நீ எழுதி வெச்சிருக்கிற லட்சணம். வீடியோ, ரிசப்ஷன், ஐஸ்கிரீம் இந்த ஐட்டங்களோட செலவுகள்லே பாதி ஜெயராமன் குடுக்கிறதாத்தானே பேச்சு? பிராக்கெட்ல 'ஜெயராமனிடமிருந்து வர வேண்டிய பாக்கி இவ்வளவு'ன்னு எழுதி வெச்சா போறுமா? அதை அவங்கிட்டேயிருந்து வசூல் பண்ணிட்டுன்னா எங்கிட்டே கணக்கு குடுக்கணும். அவங்கிட்டே என்னைப் போய்

கேக்கச் சொல்றயா? நீ ஏன் போய் வசூல் பண்ணிண்டு வரலே...

(சுகுமாரன் பதில் சொல்லாமல் பேசாமல் நிற்கிறான்)

**வாஞ்சி:** வாய்லே கொட்டைப்பாக்கா அடைச்சிருக்கு? பேசேன்.

(சுகுமாரன் கௌரியைப் பார்க்கிறான்.)

**கௌரி:** ஏம்பா, மாப்பிள்ளைக்கிட்டே பேசறேளா, இல்லே உங்க பில் கலெக்டர்கிட்டே பேசறேளா?

**வாஞ்சி:** நான் மாப்பிள்ளை கிட்டே சாதாரணமாகத் தானே பேசிண்டிருக்கேன். உனக்கு ஏன் புதுசா சந்தேகம் வருது?

**கௌரி:** இதோ பாருங்கோப்பா, உங்க தங்கைப் பிள்ளையே உங்களுக்கு மாப்பிள்ளையா வந்திருக்காங்கறத்துக்காக என்ன வேணுமானாலும் பேசலாம்னு நினைக்காதீங்கோ. இவர் என் ஆம்படையான். இவரை என் எதிர்லேயே கிள்ளுக்கீரையா மதிச்சு அகௌரவமா நடத்தறதை நான் இனிமேயும் சகிச்சுண்டிருக்க மாட்டேன், சொல்லிட்டேன்.

**சுகு :** கௌரி! என்ன மாமாகிட்டே மரியாதையில்லாம பேசறே?

**கௌரி:** என்னமோ என் வயித்தெரிச்சலை எங்கப்பா கிட்டே கொட்டித் தீர்த்துக்கறேன். புருஷனுக்கு மத்தவா கௌரவமும் மரியாதையும் கொடுத்தா தானே பெண்டாட்டிக்குப் பெருமையா

COMICS PDF TIMES

யிருக்கும். மாப்பிள்ளையை அப்பாவே மதிக்கலேன்னா, பொண்ணுக்கு ரோஷம் பொத்துண்டு வராதாக்கும்? எத்தனை நாள்தான் பொறுத்திண்டிருக்க முடியும்?

சுகு : சரி... சரி... உள்ளே போ.

கௌரி: பகவானே! உங்களுக்கு எப்போதான் ரோஷம் பொறக்கப் போறதோ?

(போகிறாள்)

வாஞ்சி: ஏண்டாப்பா நான் சொல்றதைக் கேப்பியா, இல்லே ரோஷம் பொறந்து உன் பெண்டாட்டி சொல்றதைத்தான் கேப்பியா?

சுகு : சொல்லுங்கோ மாமா.

வாஞ்சி: சம்பந்திகளை இங்கே ஒரு நாள் விருந்துக்கு அழைக்கணுமாம். என்னிக்குன்னு உன் பெண்டாட்டிகிட்டே கேட்டுண்டு அவாளைப் போய் கூப்பிட்டு வந்துடு.

(கௌரி வருகிறாள்)

கௌரி: இதுக்கும் இவரைத் துரத்தறேளா? உங்களுக்கு இவர் குமாஸ்தாவா, கேக்கறேன்? நீங்க போய் சம்பந்தி விருந்துக்கு அழைச்சாத்தான் கௌரவமா இருக்கும். வேணுமானா இவரையும் கூட அழைச்சுண்டு போங்கோ.

வாஞ்சி: இவன் எனக்கு P.A. வா, செகரட்டரியா, இல்லே நான்தான் மந்திரியா? எங்கே போனாலும் கூடவே

அழைச்சிண்டு போறதுக்கு? நானே போய்க் கூப்பிட்டுட்டு வரேன்.

**கௌரி:** வெத்தலைப் பாக்கு, பழம் வாங்கிண்டு போங்கோ.

**வாஞ்சி:** ஊக்கும்! பாதாம் பருப்பும், முந்திரிப் பருப்பும் வாங்கிண்டு போறேன்...! போடீ வேலையை பார்த்துண்டு. அந்த மொகரகட்டைக்கு வெத்தலைப்பாக்கு பழம் வாங்கிண்டு போகணுமாம். மூஞ்சியைப் பாரு மூஞ்சியை!

*(திரை)*

### காட்சி-4

## ஜெயராமன் வீடு

*(ஜெயராமனும் மகன் சுரேஷும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்)*

**சுரேஷ்:** ஞாயிற்றுக்கிழமை உமா வீட்டுலே சம்பந்தி விருந்துக்கு ஏற்பாடு பண்ணி இருக்காளாம். வேறே எங்கேஜ்மெண்ட் ஒண்ணும் வெச்சிக்காதீங்கோ.

**ஜெய:** எனக்குத் தெரியாதே. என்னை யாரும் கூப்பிடலையே. நீ போயிட்டு வா.

**சுரேஷ்:** வாஞ்சிநாதன் உங்களைக் கூப்பிட வருவார்.

**ஜெய :** கூப்பிட்டாலும் நான் வரதாயில்லை.

**சுரேஷ்:** ஏம்ப்பா... What is the matter?

ஜெய : கல்யாணத்துலே உன் மாமனார் என்னை அவமானப்படுத்தினப்புறம் அவன் மூஞ்சியிலே முழிக்கவே பிடிக்கலே. எல்லாத்தையும் உனக்காகப் பொறுத்திண்டிருந்தேன். கல்யாணம் ஒழுங்கா நடக்கணுமேன்னு வாயைத் திறக்காம இருந்தேன்.

சுரேஷ் : அப்படி என்ன நடந்தது?

ஜெய : அதெல்லாம் இப்ப எதுக்கு, விடு... அது அவன் பிறவிகுணம். மனுஷான்னா அவனுக்கு சர்வ அலட்சியம். கல்யாணத்துலே ஒரு வேளை யாவது 'சாப்பிட வரேளா?'ன்னு அவன் என்னைக் கூப்பிடலே தெரியுமா? அது மட்டுமா... சரி, சரி, இப்ப அதெல்லாம் எதுக்கு... கயவாணிப்பய.

சுரேஷ்: நான் கூட கவனிச்சேம்ப்பா. யாரையும் நிமிஷத்துலே தூக்கியெறிஞ்சுப் பேசிடறார், சொந்த மாப்பிள்ளையைக் கூட. பாவம், சுகுமார்... என்னோடதான் சாப்பிட ஒக்காந்துண்டார்... இலைலே சாதம் கூட வெச்சாச்சு... மிஸ்டர் வாஞ்சிநாதன் அங்கேர்ந்து வந்து, 'உனக்கு என்ன அவசரம்? எட்டு மணிக்குத்தானே மூக்கைப் பிடிக்க டிபன் தின்னே, எழுந்திரு'ன்னு அவரை எழுப்பிட்டு, அந்த இடத்துலே வேறே யாரையோ ஒக்கார வெச்சுட்டுப் போனார். சுகுமாருக்கு ரொம்ப ஷேமாயிடுத்து. மூஞ்சியைத் தொங்கப் போட்டுண்டே போயிட்டார் பாவம்... I felt very much.

ஜெய: அந்தப் பையனை மாப்பிள்ளையாவா ட்ரீட் பண்றான் வாஞ்சி. கொத்தடிமை போலன்னா கொடுமைப்படுத்தறான். அது மகா கண்றாவி. அவன் கதையை உமா உனக்கு சொல்லலையா?

சுரேஷ்: எல்லாம் சொன்னா. சின்ன வயசுலேயே சுகுமாரோட அப்பா செத்துப் போயிட்டராம்; அம்மா எங்கேயோ ஆஸ்ரமத்துலே இருக்காளாம்; வாஞ்சிநாதன் தான் சுகுமாரை வளர்த்தாராம்; உமாவோட அக்காவுக்கு கல்யாணமும் பண்ணிக் கொடுத்து மாப்பிள்ளையா வீட்டோட வெச்சுண்டுட்டாராம்.

ஜெய : உமாவுக்கு அவ்வளவுதான் தெரியும். எனக்கு பூரா விவரமும் தெரியும். அந்த குடும்பம் பிரிஞ்சத்துக்கே வாஞ்சிதான் காரணம். அவன் மகா பொல்லாதவன். அந்தக் குடும்பத்தைப் பத்தியோ வாஞ்சியைப் பத்தியோ ஒண்ணுமே தெரியாமே நீ உமாவைக் கல்யாணம் பண்ணிக்கணும்னு ஆசைப்பட்டே. உனக்காக நானும் அவனோட சம்பந்தம் பேசினேன். அது கல்யாணத்தோட சரி... இனிமே எனக்கும் உன் மாமனாருக்கும் சம்பந்தமேயில்லை.

(வாஞ்சிநாதன் வருகிறார், ஜெயராமன் உள்ளே போகிறார்)

வாஞ்சி: என்னைப் பார்த்ததும் உங்கப்பா எதுக்கு அலறிப் புடைச்சிண்டு உள்ளே எழுந்து ஓடறார்? நான் புலியா சிங்கமா?

சுரேஷ்: புலியும் சிங்கமும் மனுஷா பேர்லே பாயும்; கடிச்சுக் குதறும்; அவா மனசு புண்படற மாதிரி நடந்துக்காது.

வாஞ்சி: என்ன, வந்ததும் வராததுமாக காட்டு மிருகங்களோட குணாதிசயங்களைப்பத்தி பெரிசா லெக்சர் அடிக்கறேள்?

சுரேஷ்: இல்லேல்லே! மனுஷனோட குணங்கள் எப்படி இருக்கக் கூடாதுன்னு சொல்றேன்.

வாஞ்சி: விருந்துக்கு வரணும்னு அழைக்க வந்தவனுக்கு என்னமோ உபதேசம் பண்ண ஆரம்பிச்சுட்டேளே, ஒண்ணுமே புரியலையே!

சுரேஷ்: புரிய வெக்கறேன் மிஸ்டர் வாஞ்சிநாதன். கல்யாணத்துலே நீங்க என்னவெல்லாமோ பேசி அப்பா மனசை புண்படுத்தியிருக்கேள். அவர் டிடெய்ல்ஸ் சொல்ல மாட்டேறங்கிறார். நீங்க சொல்லுங்கோ. What happened, come on... tell me now.

வாஞ்சி: இதென்னடா வம்பாயிருக்கு? நான் உங்கப்பா கிட்டே நிறைய பேசியிருக்கேன். அதுலே எது தப்புன்னு உங்கப்பான்னா சொல்லணும்? என்னைக் கேட்டா, நான் பேசினதெல்லாம் நூத்துக்கு நூறு ரைட்ன்னுதான் சொல்லுவேன். நான் சாதாரணமா பேசினது உங்கப்பா மனசை புண்படுத்தி இருந்தா, அதுக்கு நான் என்ன பண்ணமுடியும்?

சுரேஷ்: மன்னிப்பு கேக்க முடியும்!

**வாஞ்சி:** யார் கிட்டே?

**சுரேஷ்:** அப்பாகிட்டேதான்.

**வாஞ்சி:** முடியாது. உங்ககிட்டே வேணுமானா மன்னிப்புக் கேக்கறேன்.

**சுரேஷ்:** எங்கப்பாவை இன்ஸல்ட் பண்ணிட்டு எங்கிட்டே மன்னிப்புக் கேக்கறேன்னா என்ன அர்த்தம்? இருங்க, அவரையே கூப்பிடறேன். அப்பா... அப்பா...

**வாஞ்சி:** நோ... நோ... அவரைக் கூப்பிட வேண்டாம். எதுக்கோ அவசரமா உள்ளே எழுந்து போனவரை டிஸ்டர்ப் பண்ண வேண்டாம். என் பொண்ணை உங்களுக்கு கல்யாணம் பண்ணிக்கொடுத்து பெரிய தப்பு பண்ணிட்டேன். அதுக்காக வேணுமானா உங்கிட்டே மன்னிப்புக் கேக்கறேன்னு சொன்னேன். வயசுலே சின்னவனாயிருந்தாலும் பெரிய மனசு பண்ணி மன்னிச்சுக்கோங்கோ மாப்பிள்ளை.

**சுரேஷ்:** ஓஹோ, இப்ப என்னை இன்ஸல்ட் பண்றேளா? பேச்சு இத்தனை தூரத்துக்கு வந்தப் புறம் நானும் பேசிடறேன். நீங்க சம்மதிக்கலேன்னாலும் உங்க பொண்ணை நான் கல்யாணம் பண்ணிண்டிருப்பேன், தெரியுமா? உமாவும் ரெடியாத்தான் இருந்தா. எங்கப்பா எனக்காக உங்ககிட்டே வந்து பொண்ணு கேட்டதனாலே ஒங்கக்கை ஒசந்து போயிடுத்துன்னு தப்புக் கணக்குப் போட்டு எங்கப்பாவைக் கேவலமா

நடத்தினா, நான் சகிச்சிண்டிருப்பேன்னு நினைச்சேளா? You are thoroughly mistakan மிஸ்டர் வாஞ்சிநாதன். ஒண்ணு சொல்றேன், கேட்டுக் கோங்க. உங்க முதல் மாப்பிள்ளை மாதிரி என்னையும் அலட்சியமா நடத்தலாம்னு மட்டும் கனவு காணாதீங்கோ. I warn you, எங்கிட்டே கொஞ்சம் ஜாக்கிரதையாவே இருங்கோ...

வாஞ்சி: முதல்லே உபதேசம் பண்ணினேள், இப்ப மிரட்டறேளா? இன்னும் கொஞ்ச நேரம் இங்க இருந்தேன்னா அப்பனும் பிள்ளையுமா சேர்ந்து என்னைக் கழுத்தைப் பிடிச்சு வெளிலே தள்ளினாலும் தள்ளுவேள்... பொண்ணைக் குடுத்திட்டேங்கறதுக்காக என்னை அவமானப் படுத்தலாம்னு நினைக்கறேளா... மானம் மரியாதை உள்ள பரம்பரையிலே வந்தவன் நான். சம்பிரதாயத்துக்குக் கட்டுப்பட்டு, சம்பந்தி விருந்து குடுக்கணும்னு ஆசைப்பட்டேன். ஆனா, என் வீட்லே விருந்து சாப்பிட உங்களுக்கு யோக்கியதை இல்லேன்னு நன்னா தெரிஞ்சுப் போச்சு. மாப்பிளே, இதை நன்னா கேட்டுக் கோங்கோ, இந்த நன்னிலம் வாஞ்சி நாதன் இது வரைக்கும் யாருக்கும் மண்டியிட்டதில்லே. யார் கிட்டேயும் மன்னிப்பும் கேட்டதில்லே. தெரிஞ்சு கோங்கோ... இதை உங்க அப்பன் கிட்டேயும் சொல்லுங்கோ. (வேகமாக போகிறார்)

(திரை)

## காட்சி-5

# வாஞ்சிநாதன் வீடு

(சுந்தா நந்தா வருகிறார்கள்)

சுஜாதா: ஹலோ ஜோக்கர் மாமாஸ், வெல்கம். இன்னிக்கு ஏதாவது புதுசா புதிர் போடுங்களேன்.

நந்தா: (அருகில் வந்து மெள்ள) உன் தாத்தா வூட்லே இருக்காரா?

சுஜாதா: இதுதான் புதிரா?

நந்தா : புதிர் இல்லே, பயம்! வூட்லே இருக்காரா?

சுஜாதா: இல்லே, தைரியமா சொல்லுங்கோ.

நந்தா : சரி, சிம்ப்ளா ஒரு 'ரிடில்' போடறேன். என் அண்ணனுக்கு கல்யாணம். ஆனா, அண்ணன் வராமலே அந்தக் கல்யாணம் நடந்திருச்சு. எப்படிச் சொல்லு பார்க்கலாம்?

சுஜாதா : ரீல் விடறீங்க... அது எப்படி நடக்க முடியும்?

நந்தா : பெரிய அண்ணனுக்குக் கல்யாணம். அதுக்கு சின்ன அண்ணனாலே வரமுடியலே. கல்யாணம் நடக்காதா?

சுஜாதா: கடி, கடி! சரி, நான் ஒண்ணு சொல்றேன். நீங்க கண்டுபிடிங்க பார்க்கலாம். தண்ணிலே கரையற பூ எது?

('என்னது' என்பது போல் இருவரும் ஒருவரையொருவர் பார்த்து விழிக்கின்றனர்)

சுஜாதா: நான் சொல்லட்டுமா? தண்ணீரில் கரையற பூ, உப்பூ!

சுந்தா : ஏய்! நீ கெட்டிக்காரப் பொண்ணு. எங்களையே ஏமாத்திட்டியே...

சுஜாதா: அப்படின்னா என்னையும் உங்க ஜோக் கச்சேரிலே சேர்த்துக்கறீங்களா?

நந்தா : ஐயோ, உங்க தாத்தா எங்களைத் தூக்குலே தொங்க விட்டுடுவார். (சுகுமார் வருகிறான்)

சுகு : வாங்க, என்ன விஷயம்... சுஜி, நீ உள்ளே போ.... (போகிறாள்)

சுந்தா : ஒண்ணுமில்லே... நம்ம வீட்டுக் கல்யாண ரிசப்ஷன் கச்சேரி பணத்துலே பாதி ஜெயராமன் குடுப்பார்னு சொன்னீங்க இல்லையா? அவர்கிட்டே கேட்டப்பா, உங்கக்கிட்டேயே வசூல் பண்ணிக்கச் சொல்றாரு. இப்படி ரெண்டு பேருமா மாத்தி மாத்தி எங்களை உதைச்சு விளையாடறீங்களே, நாங்க என்ன ஃபுட்பாலா?

சுகு : இதோ பாருங்க, மாமா வர டயமாச்சு. அவருக்கு இந்த விஷயம் தெரிஞ்சா சத்தம்போட ஆரம்பிச்சுடு வார். நீங்க கிளம்புங்க, ரெண்டு நாள் கழிச்சு ஆபீசுக்கு வாங்க, கணக்கு தீர்த்துடறேன்.

சுந்தா : வரோம். அடுத்த தரம் பணம் ஒழுங்கா வர்ர இடமா பார்த்து கச்சேரி ஏற்பாடு பண்ணுங்க சார், இது மாதிரி சாவுகிராக்கில்லாம் வேண்டாம். வரோம்.

(போகிறார்கள். எதிரில் வாஞ்சி வருகிறார்)

வாஞ்சி: எங்கேய்யா வந்தீங்க?

சுந்தா : நாங்க வரலியே... போயிகிட்டுல்லே இருக்கோம்! (ஓடுகிறார்கள்)

வாஞ்சி : சுகுமாரா, இந்த பன்னாடைப் பசங்களை இனிமே வீட்டுக்குள்ளே சேக்காதே... இவங்களைப் பார்த்தாலே எனக்கு ஜயராமன் ஞாபகம் பத்திண்டு வந்துடறது... ஆமா, அப்பனும் பிள்ளையும் தான் என்னை அவமானப் படுத்தினாளே, நேத்து நீ எதுக்கு அந்த வீட்டுக்கு போய்ட்டு வந்தே?

(கௌரி வருகிறாள்)

கௌரி: உமாவை பார்த்துட்டு வரச் சொல்லி நான் தான் அனுப்பினேன். நீங்க அவ மாமனாரோடையும் ஆம்படையானோடையும் சண்டை பிடிச்சுண்டு வந்துட்டேள். அதுலேருந்து உமா இங்கே வரதேயில்லை. அவா போக வேண்டா னுட்டாளோ என்னவோ. அவகிட்டே யிருந்து ஒரு லெட்டர் கூட இல்லே.

வாஞ்சி: ஜெயராமன் லெட்டர் போட வேண்டான்னு சொல்லியிருப்பான். அந்த தேரழுந்தூர் வம்சத்துக்கே இந்த விஷமத்தன மெல்லாம் உண்டு...

கௌரி : (தனக்குள்) நீங்க மட்டும் ரொம்ப சாதுவாக்கும்?

COMICS PDF TIMES

வாஞ்சி: நான் பேசினா, ஆம்பளையாட்டம் எனக்குப் பதில் சொல்றதை விட்டுட்டு, பொட்டை மாதிரி எதுக்கு பதுங்கி உள்ளே ஓடறான்? கையாலாகாத படவா! மாட்டுப் பெண்ணைப் படுத்தலாம்னு பார்க்கறானா? நான் அங்கே வரமாட்டேன்னு நினைச்சுண்டிருக்கானா? நாளைக்கே அங்கே போய் செவிட்லே அறையற மாதிரி அந்த சவுண்டிப் பயலை கேள்வி கேக்கறேனா இல்லியா பாரு?

கௌரி: வேண்டாம்ப்பா ப்ளீஸ், நீங்க அங்கே போகாதீங்கோ! ஒண்ணுகிடக்க ஒண்ணு பேசி இன்னும் காம்ப்ளிகேட் பண்ணிட்டு வந்துடுவேள். நான் ஒரு நாள் போய் சமாதானமா பேசிட்டு வரேன். எல்லாம் சரியா போயிடும்.

வாஞ்சி: நீ ஏண்டி அங்கே போகணும்? ஒண்ணும் வேண்டாம். நான் பயந்து போய் உன்னை தூது அனுப்பிச்சேன்னு ஜெயராமன் நினைச்சுப்பான். சுகுமாரா, கௌரி சொன்னாலும் நீ இனிமே அங்கே போக வேண்டாம், சொல்லிட்டேன். நான் போய் உமாவை இங்கே அழைச்சுண்டு வரேன் பாரு. அவா அனுப்பமாட்டேன்னு சொன்னா நேரே போலீஸ் ஸ்டேஷனுக்குப் போகப் போறேன்.

கௌரி: ஐயையோ, எதுக்கு?

வாஞ்சி: கேட்கற பணமும் நகையும் குடுக்கலேன்னு என் பொண்ணை சித்திரவதை பண்றா. ஸ்டவ்

வெடிச்சதுன்னு பொய் சொல்லி, நெருப்பு வெச்சு கொளுத்தினாலும் கொளுத்திடுவான்னு பயமாயிருக்குன்னு கம்ப்ளெயிண்ட் குடுக்கப் போறேன்.

**கௌரி:** என்னப்பா இது? போலீஸ் கேஸ் அது இதுன்னு பெரிசாயி பேப்பர்லெல்லாம் ஆர்ட்டிகிள்ஸ், போட்டோன்னு வந்து அவமானப்பட வெசசுடாதீங்கோ, உங்களை கெஞ்சிக் கேட்டுக்கறேன்.

**வாஞ்சி:** மான அவமானம்னு சொல்லிண்டு பயந்து சாகற தொடை நடுங்கி கும்பல்டீ நீங்க. இந்த நன்னிலம் வாஞ்சிநாதன் முன்வெச்ச காலை பின் வைக்கமாட்டான். ஒரு காரியத்துலே முனைஞ்சுட்டேன்னா ரெண்டுலே ஒண்ணு பார்த்துட்டுத்தான் திரும்புவேன். என்னை யாரும் தடுக்க முடியாது.

**கௌரி:** அப்பா, உங்களுக்கு எத்தனை நமஸ்காரம் வேணுமானாலும் பண்றேன். இந்த வீம்பும் வீண் பிடிவாதமும் வேண்டாம். அங்கே போய் எதையாவது ‘Rash’ ஆ பேசி வெக்காதீங்கோ. அப்புறம் உமாவோட வாழ்க்கையே பாழாயிடும்.

**வாஞ்சி:** உமாவைப் பத்தி உன்னை விட எனக்கு அதிகமா அக்கறையிருக்கு. என்ன பண்ணணும் ஏது பண்ணணும்னு எனக்குத் தெரியும். நீ ஒண்ணும் எனக்கு அட்வைஸ் பண்ண வேண்டாம், வாயை மூடிண்டிரு...

கௌரி: அங்கே போய்த்தான் தீருவேள்னா தனியா போகாதீங்கோ. பின்கட்டு நாகராஜ ராவை அழைச்சிண்டு போங்கோ. சொன்னா கேளுங்கோ.

வாஞ்சி: இந்தப் பொட்டப்பய ஜெயராமனோட பேசறத்துக்கு தொடை நடுங்கி ராயர் எனக்குத் துணையா? இதோ பாரு! கடைசித் தடவையா சொல்றேன், நீ இதுலே தலையிடாதே. இது என் சொந்த விஷயம்.

சுகு : மாமா நீங்க இப்ப அங்கே போக வேண்டாம்னு தான் எனக்கும் தோண்றது.

வாஞ்சி: ஓஹோ நீ வேறே எனக்கு அட்வைஸ் பண்ண ஆரம்பிச்சுட்டியா? என் போறாத காலம்தான்!

சுகு : ''அப்பாவை கொஞ்ச நாளைக்கு இங்கே வரவேண்டாம்னு சொல்லுங்கோ''ன்னு உமா எங்கிட்டே சொன்னா.

வாஞ்சி: ஓஹோ! அவா உமாவை அப்படிச் சொல்ல சொல்லியிருப்பா. ஞாயித்துகிழமை நான் அங்கே வரப்போறேன்னு அவங்ககிட்ட போய் சொல்லிட்டுவா. நான் இவா கல்யாணத்துக்கு ஒத்துக்காம இருந்திருந்தேன்னா, உமாவை இழுத்துண்டு போய் அவன் தாலியை கட்டியிருப்பானாம். இதுக்கு உமாவும் சரின்னாளாம்... உன் ஷட்டகன் என்கிட்டேயே சொல்றாண்டா, திமிரைப் பார்த்தியா? இந்தத் திமிரை அடக்கினாத்தான் எனக்குத் தூக்கம் வரும்.

கௌரி : அப்பா, நான் சின்னவதான். நல்லதும் கெட்டதும் அப்பாவுக்கு நான் எடுத்துச் சொல்ல வேண்டி இருக்கேன்னு வேதனையாத்தான் இருக்கு. அம்மா ஸ்தானத்திலேருந்து நான் சொல்றேன். மனுஷா பேர்லே இருக்கிற விரோதத்தை வளர்த்துண்டே போகக்கூடாது. பெரியவா தங்களோட கோபத்தாலே சின்னவாளோட சந்தோஷத்தைப் பாழாக்கக் கூடாது. உங்களை யார் அங்கே கூப்பிட்டா... ? உமாவே உங்களை வரவேண்டான்னுட்டா, அழையா வீட்டுக்கு நுழையா சம்பந்தியா போனேள்னா மூஞ்சிலே கரியைப் பூசிண்டு அவமானப் பட்டுண்டுதான் வந்து நிப்பேள்.

வாஞ்சி: (கடுங்கோபத்துடன்) சுகுமாரா... !

சுகு : கௌரி! இப்ப உள்ளே போகப் போறயா இல்லியா நீ? (போகிறாள்)

(திரை)

## காட்சி-6

# ஜெயராமன் வீடு

(ஜெயராமனும் சுரேஷும்)

சுரேஷ்: அப்பா, வாஞ்சிநாதன் இங்கே வரப்போறதா சுகுமார் எனக்கு போன் பண்ணினார்.

ஜெய : எதுக்காகவாம்?

சுரேஷ்: எதுக்குன்னு சொல்லலே. ஞாயிற்றுக்கிழமை மாமனார் வருவார். அவர் ஏதாவது கோவமாகவோ முரட்டுத் தனமாகவோ பேசினா, நீங்க தப்பா எடுத்துக்காதீங்கோன்னார். உமாவோட அக்காவும் ரொம்ப கேட்டுண்டாளாம்.

ஜெய : நீ என்ன பண்ணப் போற?

சுரேஷ்: அதான் எனக்கும் புரியலே, Let us see. அன்னிக்கு அவ்வளவு பேசிட்டுப் போனப்புறம் மறுபடியும் இங்கே வரமாட்டார்னு நினைச்சேன்.

ஜெய : உமா ஆபீஸ்லேர்ந்து வந்துட்டாளா?

சுரேஷ்: வந்துட்டா.

ஜெய : கூப்பிடு.

சுரேஷ்: உமா, இங்கே வா.

(வருகிறாள்)

ஜெய : உங்கப்பா ஞாயித்துக்கிழமை இங்கே வரேன்னிருக்காராமே, அதைப்பத்தி உனக்கு ஏதாவது தெரியுமா?

உமா : தெரியாதே.

ஜெய : சுகுமார் உனக்கு போன் பண்ணலியா?

உமா : இல்லே. நானும் அவருக்குப் பண்ணலே.

ஜெய : சரி, நீ உள்ளே போ... (போகிறாள்) சுரேஷ், டாக்டர் விஸ்வநாத் உங்க ரெண்டு பேரையும், ஒரு நாள் சாப்பிட வரச் சொல்லி இருக்கார்லே,

ஞாயித்துக்கிழமை கார்த்தாலே வரேன்னு நீ அவர்கிட்டே நாளைக்குச் சொல்லிடு. அன்னிக்கு அங்கே போயிட்டு மத்யானத்துக்கு மேலே வா... நானும் அம்மாவும் காஞ்சீபுரம் போயிட்டு சாயந்திரமா வரோம்.

**சுரேஷ்:** மாமனார் எதுக்கு வரார்ன்னு தெரியாம, பயந்துண்டு எல்லாரும் எதுக்கு வீட்டைப் பூட்டிண்டு ஓடணும்?

**ஜெய :** எனக்கென்னடா பயம்? அவன் வரச்சே எனக்கு இங்கே இருக்கப் பிடிக்கலே. அவன் மூஞ்சிலே முழிக்கவே எனக்குப் பிடிக்கலே... இந்த ஜன்மத்துலே இனிமே இவனுக்குச் சரிசமமா நான் ஒக்காந்துப் பேசப் போறதில்லே...

(வாஞ்சி வருகிறார். ஜெயராமன் உள்ளே எழுந்து போகப் புறப்படுகிறார்.)

**வாஞ்சி:** சம்பந்தி, எங்கே அவசரமா போறேள்? உங்களைப் பார்க்கத்தான் வந்திருக்கேன். ஒரு நிமிஷம் நில்லுங்கோ.

(ஜெயராமன் வேறு பக்கம் திரும்பிக் கொண்டு நிற்கிறார்)

**சுரேஷ்:** நீங்க ஞாயித்துக்கிழமைன்னா வரப்போறதா சுகுமார் சொன்னார்.

**வாஞ்சி:** உண்மைதான்! பஞ்சாங்கத்தைப் பார்த்திண்டிருந்தேன். 'இன்னிக்கு சுபமுகூர்த்த நாள். எந்த சுபகாரியத்தையும் ஆரம்பிக்க நல்ல நாள்'னு போட்டிருந்தது; உடனே ஓடி வந்தேன்.

சுரேஷ்: என்ன விசேஷம்?

வாஞ்சி: சொல்றேன் (ஜெயராமனிடம்) மொதல்ல இதை வாங்கிக்கோங்கோ (வெத்தலைப் பாக்கு, பழப் பையை நீட்டுகிறார்.)

ஜெய : உமா, இங்கே வாம்மா (வருகிறாள்) உங்கப்பா பொண்ணுக்கு அருமையா புடவையும் நகையும் வாங்கிண்டு வந்திருக்கார்... இதை வாங்கி பத்திரமா காட்ரெஜ் பீரோலே கொண்டு போய் வைம்மா!

வாஞ்சி: நீங்க இன்னிக்கு என்னை எத்தனை அவமானப் படுத்தினாலும் நான் பதில் பேசமாட்டேன். இந்தாம்மா, பூ பழத்தை வாங்கிண்டு போய் சுவாமிகிட்டே வை (வாங்கிக் கொள்கிறாள்) சௌக்கியமா இருக்கியா உமா... ?

(அரைகுறையாகத் தலையை ஆட்டுகிறாள்)

ஜெய : ஏம்மா, நீ எங்கேயோ போகணும்னு சொல்லிண்டிருந்தியே, புறப்படலையா?

சுரேஷ் : அகிலா வீட்டுக்குப்போகணும்னு சொன்னியே... (விழிக்கிறாள். 'வெளியே போய் விடு' என்பது போல் சைகை காட்டுகிறான்)

வாஞ்சி: மாப்ளே, அன்னிக்கு நான் உங்கப்பா கிட்டேயும் உங்ககிட்டேயும் கொஞ்சம் மரியாதை குறைவா நடந்துண்டுட்டேன். அதுக்காக ரொம்ப வருத்தப்பட்டேன். அதுக்காக என் பொண்ணு

கௌரி என்னை ஏகமா கோவிச்சுண்டா. அவதான் என்னை இங்கே துரத்தினா... என்னை மன்னிச்சுடுங்கோன்னு சொல்லத்தான் வெத்தலே பாக்கு பழத்தோட வந்தேன். சம்பந்தி! நான் உங்களைவிட ரெண்டு மாசம் பெரியவன். இல்லாப்போனா கீழே விழுந்து சாஷ்டாங்கமா நமஸ்காரம் பண்ணியிருப்பேன்.

**சுரேஷ்:** ஒக்காருங்களேன், ஏதாவது சாப்பிடறேளா?

**வாஞ்சி:** மொதல்லே அப்பா ஒக்காரட்டும், அவர் ஒக்காந்து எனக்கு சரிசமமா ஒரு வார்த்தை பேசினா போறும் எனக்கு. அதுவே வயிறு நிரம்ப சாப்பிட்ட மாதிரி.

(சுரேஷ் அப்பாவைப் பார்க்க, ஜெயராமன் உட்காருகிறார். சுரேஷ் உள்ளே போகிறான்.)

**ஜெய :** உமா, நீ ஃப்ரெண்டை பார்க்கப் போகணும்னு சொல்லிண்டிருந்தியே, போயிட்டு வா.

**வாஞ்சி:** மேலே பேசறதுக்கு முன்னே உங்களுக்கு ஒரு விஷயத்தைச் சொல்லப் போறேன். உங்க தாத்தா, அதாவது அப்பாவைப் பெத்தவர், கோமல் சுந்தரராஜய்யர்னு பேர் - அந்தக் காலத்துலே, தஞ்சாவூர் ஜில்லா பூராவும் பிரபலமானவர் - கேள்விப் பட்டிருக்கேளோ?

**ஜெய :** ஓ, கேள்விப்பட்டிருக்கேன்...

**வாஞ்சி:** அவர் சப்மேஜிஸ்ட்ரேட்டா இருந்தார்.

**ஜெய :** தெரியும்!

**வாஞ்சி:** *அவருக்கும் என் அம்மாவை பெத்த தாத்தா சாத்தனூர் கோபாலசாமி ஐயருக்கும் ஏதோ காரணத்துக்காக பகை. ஜன்ம விரோதம். நேரே பார்த்தா ஒத்தருக்கொருத்தர் பேசிக்கக் கூட மாட்டாளாம்.*

*(உமா வந்து நான் 'ஃப்ரெண்டு வீட்டுக்கு போயிட்டு வரேம்ப்பா' என்று சொல்லிவிட்டு, சுரேஷிடமும் 'போயிட்டுவரேன்' என்று கூறிவிட்டுப் போகிறாள்)*

**வாஞ்சி:** *நான் உமாகிட்டே பேசிடக் கூடாதுங்கறதுக்குக் காக ரெண்டு பேரும் ஏதோ சாக்கு சொல்லி சாமர்த்தியமா அவளை வெளியே அனுப்பி வெச்சிருந்தாலும், ஒருவிதத்துலே அது எனக்கு சௌகரியமா இருக்கு. எங்க தாத்தாவுக்கு நடந்த அசிங்கத்தை அவ இருக்கிறப்ப எப்படிச் சொல்றதுன்னு நினைச்சுண்டிருந்தேன். அவ வெளியிலே போனது நல்லதா போச்சு... இப்ப நான் என்ன சொல்லிண்டிருந்தேன்...*

**ஜெய :** *கோபாலசாமி ஐயர்...!*

**வாஞ்சி:** *யெஸ்... இந்த கோபாலசாமி ஐயருக்கு லேடீஸ் விஷயத்துலே கொஞ்சம் வீக்னெஸ்... வயசுக்குத் தகாத ஒரு சபலம். ஒரு சமயம் அவர் கோமல் வந்திருந்தப்ப குடியானத்தெருவிலே கையும் களவுமா மாட்டிண்டுட்டார். உங்க தாத்தா மனசு வெச்சுருந்தா ரசாபாசம் ஆகாம காப்பாத்தி யிருக்கலாம். பழைய விரோதத்தை மனசுலே*

வெச்சிண்டு, குடியானவாளோட சேர்ந்துண்டு, எங்க தாத்தாவுக்கு கரும்புள்ளிச் செம்புள்ளி குத்தி கழுதைமேலே ஏத்தி ஊர்கோலம் விட்டிருக்கார். இது சாதாரண அவமானமா? சின்ன வயசுலே எங்கம்மா இதை என்கிட்டே சொன்னதுலேர்ந்து உங்க தாத்தா சுந்தரராஜ ஐயர் மேலேயும் உங்கக் குடும்பத்து மேலேயும் என் மனசுலே ஆத்திரமும் கோபமும் ஆழமா பதிஞ்சு போயிடுத்து... விதி நம்பளை சம்பந்தியா சேர்த்து வெச்சப்ப உங்களை அவமானப்படுத்த எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைச்சுதா நினைச்சு உங்க மனசைக் குத்தற மாதிரி நிறைய பேசிட்டேன்...

**ஜெய** : ஆடு ஓநாய் கதை மாதிரி!

**வாஞ்சி:** சரியா சொன்னேள். யாரோ செஞ்ச தப்புக்கு யார் மேலேயோ பழி தீர்த்துண்டது மகா தப்பு மட்டுமல்ல, மகா பாவம்னு என் மனச்சாட்சி உறுத்தித்து. நான் உங்க பேர்லே பழி தீர்க்கப் போய், அது உமா தலைலே விடிஞ்சுது... தாயில்லாப் பொண்ணு, அவ கண் கலங்கினா என்னாலே தாங்க முடியாது.

(கண்களைத் துடைத்துக் கொள்கிறார்)

**சுரேஷ்:** அப்படியெல்லாம் ஒண்ணுமில்லே. நீங்க ஒர்ரி பண்ணிக்காதீங்கோ சார்.

**வாஞ்சி:** கெஞ்சிக் கேட்டுக்கறேன், வயசு காலத்துலே என்னைக் கண்கலங்க வெச்சுடாதீங்கோ...

COMICS PDF TIMES

உமாவை எங்க வீட்டுக்கு வரவிடாம தடுத்து கௌரிகிட்டேயிருந்து அவளைப் பிரிச்சுடா தீங்கோ. சின்ன வயசுலேயே அம்மாவைப் பறி கொடுத்துட்டு ஒத்தருக்கு ஒத்தர் ஆதரவா வளர்ந்தவா... உமாவைப் பார்க்காம கௌரி ரொம்ப உருகிப் போறா. அவதான் என்னை இப்ப இங்கே துரத்தினா. தயவு பண்ணுங்கோ.

சுரேஷ்: நீங்க ஏன் இப்படியெல்லாம் பேசறேள்...? நடந்ததெல்லாம் நடந்து போச்சு... நடந்ததைப் பத்தி அப்பா வருத்தப்பட்டாரே யொழிய அவர் மனசுலே கோபமோ விரோதமோ இல்லை.

வாஞ்சி: அப்படின்னா எனக்கு ரொம்ப சந்தோஷம் தான். என்னை மன்னிச்சுட்டேன்னு உங்கப்பா அவர் வாயாலே ஒரு தரம் சொல்லிட்டா நான் நிம்மதியா திரும்பிப் போவேன்.

ஜெய : சரி... சரி... இனிமேலாவது நாக்கை அடக்கிப் பேச கத்துக்கோங்கோ வாஞ்சி. நமக்கு மிஞ்சி ஒருத்தருமில்லேங்கிற திமிர்லே மனுஷாளை வார்த்தையாலே குத்தி புண்படுத்தறதை இனிமே யாவது விட்டுடுங்கோ.

வாஞ்சி: என் போறாத காலம், உங்ககிட்டே இப்படி குணங்கெட்டு நடந்துண்டுட்டேன்.

ஜெய : எங்கிட்டே மட்டுமில்லே... உங்களாலே உங்க தங்கையும் அவ ஆத்துக்காரரும் எவ்வளவு அவமானப்பட்டா? ஏன் வீட்டை விட்டுப்

போனான்னு எனக்குத் தெரியும், எனக்கு என்ன, ஊருக்கே தெரியும். உங்க குத்தல் பேச்சுத்தான் உங்க பிள்ளையையும் கண்காணா தேசத்துக்கு துரத்தித்துன்னும் எனக்குத் தெரியும்.

*(சுரேஷ் 'பேசாமே இருங்களேன்' என்று அப்பாவிடம் சைகை காட்டுகிறான்)*

வாஞ்சி: போறும் போறும்... நடந்ததையெல்லாம் நினைச்சு உள்ளுக்குள்ளே ஏற்கெனவே நான் வெந்து செத்துண்டிருக்கேன். உங்க ஒவ்வொரு வார்த்தையும் என்னை செருப்பாலே அடிச்சு 'இப்ப புத்தி வந்துதா, புத்தி வந்துதா'ன்னு கேக்கற மாதிரி இருக்கு. 'புத்தி வந்துடுத்து' (கன்னத்தில் போட்டுக் கொள்கிறார்) இது வரைக்கும் எவங்கிட்டேயும் நான் மண்டியிட்டதில்லே... உங்ககிட்டே கால்லே விழாத குறையா கேட்டுக்கறேன்... 'கல்யாணம் ஆயி இன்னும் மாப்பிள்ளையும் பொண்ணும் வீட்டுக்கு வரலையே'ன்னு அக்கம் பக்கத்துலே பேசிக்கிறது எனக்கு மானம் போற மாதிரி இருக்கு. பெரிய மனசு பண்ணணும்.

ஜெய : நான் ஒண்ணும் குறுக்கே நிக்கலே... சுரேஷோட நீங்க பேசிக்கோங்கோ. அவன் இஷ்டப்பட்டா ரெண்டு பேரையுமே அழைச்சுண்டு போங்கோ, நான் வேண்டாங்கலே.

*(உள்ளே எழுந்து போகிறார்)*

வாஞ்சி: மாப்பிள்ளே, நான் செஞ்சது, பேசினது ஒண்ணையும் பாராட்டாம உங்கப்பா பெரிய மனுஷனா நடந்துட்டார். அவரோட பிள்ளைக்கும் அதே மனசுதானே இருக்கும்? உங்களாலே வர முடியாட்டாலும் உமாவை யாவது வீட்டுக்கு அனுப்பி வையுங்கோ.

சுரேஷ்: ஞாயிற்றுக்கிழமை நானே உமாவை அங்கே அழைச்சுண்டு வரேன். நீங்க நிம்மதியா போங்கோ.

வாஞ்சி: ரொம்ப சந்தோஷம். கார்த்தாலே சாப்பிடவே வந்துடுங்கோ. ரெஸ்ட் எடுத்துண்டு, டிபன் சாப்பிட்டுட்டு, சாயந்திரமா திரும்பிப் போய்க்கலாம்.

சுரேஷ்: ஓகே... ஓகே...

(திரை)

## காட்சி-7

## வாஞ்சிநாதன் வீடு

(கௌரி உட்கார்ந்து கொண்டிருக்க, பின் கட்டு நாகராஜ ராவ் வருகிறார்)

கௌரி: என்ன மாமா, ஊருக்கெல்லாம் போயிட்டு வந்தேளா... ஊர்லே உங்க அப்பாவும் அம்மாவும் சௌக்கியமா?

நாக : ரெண்டு பேருக்குமே உடம்பு முடியலே, வயசான காலத்திலே ஏதோ ஒருத்தருக்கொருத்தர்

துணையா இருந்திண்டிருக்கா. இங்கே வந்துடுங்கோன்னா, மாட்டேங்கறா...

கௌரி: அப்புறம் வேறே எங்கெல்லாம் போயிருந்தேள்?

நாக : அக்கம் பக்கத்துலே இருக்கிற கோயிலுக்கெல்லாம் போயிருந்தேன்.... என் பொண்ணு சரஸ்வதிக்கு கர்ப்பரக்ஷாம்பிகை பிரார்த்தனை ஒண்ணு பாக்கியிருந்தது... அதுக்காக திருக்கருகாவூர் போயிருந்தேன். அப்புறம் நடுக்காவேரி ஆச்ரமத்துக்குப் போய் உங்க அத்தையை பார்த்துட்டு வந்தேன்.

கௌரி: நிஜமாவா? அத்தை எப்படி இருக்கா மாமா?

நாக : அப்படியேதான் இருக்கா... எதுலேயும் பட்டுக்காம ஒரு யோகியைப் போல ஒக்காந்திண்டு பூ தொடுத்திண்டிருந்தா... என்னைப் பார்த்துட்டு தெரிஞ்ச மாதிரியே காட்டிக்கலே... 'என்னைத் தெரியறதா மாமி?'ன்னு கேட்டேன். தலையைத் தூக்கிப் பார்த்து லேசா சிரிச்சுட்டு, 'எல்லாரும் சௌக்யம் தானே'ன்னு கேட்டுட்டு மறுபடியும் பூ தொடுக்க ஆரம்பிச்சுட்டா. உமா கல்யாணத்தைப் பத்தி சொன்னேன். 'இன்விடேஷன் வந்ததே' அப்படீன்னு ஒரே வார்த்தையிலே கல்யாணம் விசாரிச்சுட்டா.

கௌரி: ஆச்சரியமாயிருக்கு! இவளாலே எப்படித்தான் இப்படி இருக்க முடியறதோ?

நாக: 'ஒரு நடை மெட்ராசுக்கு வந்துட்டுப் போங்களேன்'னு கூப்பிட்டேன்! 'எனக்கு அங்கே

என்ன வெச்சி இருக்கு? மனுஷாளை பார்த்து ஆகவேண்டிய காரியம் என்ன இருக்கு' அப்படின்னுட்டா.

கௌரி: பிள்ளையைப் பத்தி ஒரு வார்த்தை கூட விசாரிக்கலையா?

நாக : ஊஹூம், ஒரு வார்த்தை கூடப் பேசலே. ஏதோ ஒரு சுலோகத்தை முணுமுணுக்க ஆரம்பிச்சுட்டா... 'நீங்க போகலாம்'னு சொல்ற மாதிரி எனக்கு தோணித்து. அங்கேர்ந்து நகர்ந்துட்டேன்.

(சுகுமார் வருகிறான்)

நாக : வாப்பா, உங்கம்மாவை ஆச்ரமத்திலே பார்த்தேன். சௌக்யமா இருக்கா.

சுகு : என்னிக்குப் பார்த்தேள்?

நாக : புதன்கிழமையன்னிக்கு.

சுகு : என்ன கோயின்ஸிடென்ஸ் பார்த்தேளா? முந்தா நாள் ராத்திரி அம்மா சொப்பனத்திலே வந்து ''சுகு, உன்னைப் பார்க்கணும் போலேருக்கு. குழந்தையை அழைச்சுண்டு ஒருநாள் வாயேன். நான் ஒருத்தி இருக்கிறதையே மறந்துட்டியா?'' ன்னு கேட்டா. அப்போலேருந்து மனசு ஒருமாதிரியா இருக்கு. நீங்க வேறே இப்படி சொல்றேள்.

கௌரி: மாமாகிட்டே உங்கம்மா உங்களைப் பத்தி ஒண்ணுமே விசாரிக்கலையாம். சொப்பனத்துலே வந்து உங்களை கூப்பிட்டிருக்கா, பாருங்களேன்.

நாக : பிள்ளையைப் பார்க்கணும்னு அம்மாவுக்கு ஆதங்கம் இல்லாம இருக்குமா? பிள்ளைக்குத் தான் அம்மாவைப் பார்க்கணும்னு இருக்காதா? மனசுக்குள்ளே இருக்கற ஏக்கங்களும் ஆசை களும் தானே சொப்பனமா வருதுன்னு சொல்றா.

கௌரி: ஒரு நாள் சுஜாதாவை அழைச்சிண்டு அத்தையைப் போய் பார்த்துட்டு வரலாம் வாங்களேன்.

நாக : போயிட்டு வாயேம்ப்பா...

சுகு : மாமாகிட்டே எப்படி சொல்றதுன்னுதான் புரியலே. இந்தப் பேச்சை எடுத்தாலே கத்த ஆரம்பிச்சுடுவார்.

கௌரி: இவ்வளாம் பெரிய ஆம்பளையாயிருந்துண்டு இப்படிச் பேச வெக்கமாயில்லே உங்களுக்கு? ''எங்கம்மாவைப் போய் பார்க்கக்கூடாதுன்னு சொல்றதுக்கு உங்களுக்கு என்ன ரைட் இருக்கு''ன்னு தைரியமா கேளுங்களேன். நீங்க குனிஞ்சு குனிஞ்சு போனா அவர் குட்டிண்டே தான் இருப்பார்.... இந்த சுதந்திரம் கூட இல்லாம மாமனார் கிட்டே ஏன் அடிமைப்பட்டுக் கிடக்கணும்? இப்படி அவமானப்படறதைவிட இவரை அழைச்சிண்டுத் தனியா போயிடலாம்னு பார்க்கறேன். நீங்க என்ன சொல்றேள் மாமா?

நாக : ஐயையோ! இதுக்கெல்லாம் நான் அபிப்பிராயம் சொல்றது அனர்த்தத்திலேதான் போய் முடியும். இதுமாதிரி பேச்சுலே கலந்துண்டேன்னு

தெரிஞ்சாலே உங்கப்பா என் மேலே பாய்வார். உன் அத்தையை பார்த்துட்டு வந்தேன்னு கேள்விப்பட்டாரோ என் மூஞ்சிலேயே முழிக்காதேன்னு விரட்டிடுவார்.

(வாஞ்சிநாதன் வருகிறார்)

வாஞ்சி: என்ன ராயரே! ஊருக்கெல்லாம் போயிட்டு வந்தாப்லே இருக்கே, எங்கெல்லாம் போயிருந்தேள்?

நாகி : திருவையாறுக்குப் போய் அப்பா அம்மாவைப் பார்த்துட்டு, ரெண்டு கோயில்களைத் தரிசனம் பண்ணிண்டு நேரே மெட்ராஸ் வந்துட்டேன். வேறே எங்கேயும் போகலே.

(கௌரியையும் சுகுமாரனையும் பார்க்கிறார்)

வாஞ்சி: அப்படின்னா வேறே ஒண்ணும் விசேஷம் இல்லேன்னு சொல்லுங்கோ.

நாக : ஒண்ணுமில்லே.

(ஒன்றும் சொல்ல வேண்டாம் என்று கௌரியிடம் சைகை காட்டிவிட்டு மெள்ள நழுவி விடுகிறார்)

வாஞ்சி: சுகுமாரா, உன் ஷட்டகன் சுரேஷ் பய ஏதாவது போன் பண்ணினானா?

சுகு : பண்ணினார். நீங்க அங்கே வந்திருந்ததா சொன்னார்.

**கௌரி:** நிஜமாவா? அப்பா அங்கே போயிருந்தாரா? நம்பவே முடியலையே!

**வாஞ்சி:** நான் அங்கே வந்து பேசினதைப் பத்தி ஏதாவது சொன்னானா?

**சுகு :** இல்லியே.

**வாஞ்சி:** எப்படிச் சொல்லுவான்? நன்னா டோஸ் வாங்கிண்டதை எவனாவது வெளியே சொல்லுவானா?

**கௌரி:** என்னது டோஸ் குடுத்தேளா? என்னன்னு?

**வாஞ்சி:** 'உமாவைப் படுத்தறேள்னு தெரிஞ்சா போலீசோட வருவேன்'னு பயமுறுத்தினேன். அப்பனும் பிள்ளையும் அப்படியே நடுநடுங்கிப் போயிட்டானுங்க... கப்சிப்... கம்ப்ளீட் சரண்டர். இந்த நன்னிலம் வாஞ்சிநாதனை இளிச்சவாயன்னு எடை போட்டானுங்க இந்த பிச்சைக்காரப் பசங்க.

**கௌரி:** சரி, சரி, அதான் உமாவை அழைச்சிண்டு இங்கே வரேன்னு மாப்பிள்ளையே சொல்லியிருக்காரே. எல்லாம் சரியாயிடும். இனிமே வீணா சண்டைக்குப் போகாதீங்கோ.

**வாஞ்சி:** நான் சண்டைக்குப் போகமாட்டேன். ஆனா, வந்த சண்டையையும் விடமாட்டேன். அந்தப் பசங்க மறுபடியும் நம்மகிட்டே வேலையைக் காட்டினாங்கன்னா, நட்டுவாக்கிளி மாதிரி

கொட்டிண்டே இருப்பேன். நான் மகா பொல்லாதவன்.

கௌரி: அதை ஒரு பெருமையா சொல்லிக்கோங்கோ. ஐயோ ராகவா!

(குடை நாயுடு வருகிறார்)

வாஞ்சி: வாங்க குடை நாயுடு.

கௌரி: ஆமா. எங்கே உங்களைக் கண்லேயே காணோம்? உங்களைப் பார்த்து ஒரு யுகம் ஆன மாதிரி யிருக்கு.

குடை: வடக்கே பொண்வூட்டுக்கு போயிருந்தேம்மா. அங்கேருந்து தலயாத்திரையெல்லாம் போயிருந்தேன். அருமையான தரிசனம். ஆகா...

கௌரி: காசிக்குப் போயிருந்தீங்களா?

குடை : ஓ, கங்கை, யமுனை நர்மதையெல்லாம் போய் ஸ்நானம் பண்ணினேன். இருந்தாலும் பொறந்த மண்ணை மிதிச்சு, நம்ம கூவம் நதியை தரிசனம் பண்ணினப்புறம்தான் மனசுக்கு சந்தோஷமா யிருக்கு. அடேங்கப்பா! நாலைஞ்சு வருஷத்திலே மெட்ராஸ் எவ்வளோ மாறிடிச்சு! பழைய வூடுகளை இடிச்சு flats ங்களா கட்டிட்டாங்க. தெருவுங்கள்லே நுழைஞ்சா அடையாளமே தெரிய மாட்டேங்குது...

(கௌரி உள்ளே போகிறாள்)

**வாஞ்சி:** என்ன மாறினாலும் குடை நாயுடுங்குற உங்க பேரு அப்படியேதானே இருக்கு?

**குடை:** நான் என்ன தெருவா? தெருவிலே சுத்தறவன் தானே? இல்லாப்போனா இந்நேரம் 'குடை நாயுடு'ங்கிற பேர்லே நாயுடுவை அழிச்சுட்டு 'குடை ஸ்ட்ரீட்' ஆக்கியிருப்பாங்களே! (சிரிக்கிறார்) ஒண்ணு பார்த்தீங்களா ஐயர், இவங்க ஜாதியை ஒழிக்கறேன் அழிக்கறேன்னு பேச ஆரம்பிச்சப்புறம்தான் மறைஞ்சிருந்த ஜாதிங்கல்லாம் ஒவ்வொண்ணா வெளியே வர ஆரம்பிச்சுடுச்சு. பேப்பரைப் பிரிச்சா தினம் புதுசா ரெண்டு ஜாதிங்களோட பேரு வருது.

**வாஞ்சி:** அது பெரிய பாலிடிக்ஸ். நமக்கு எதுக்கு, விடுங்க! உங்க பையன் ஒருத்தன் எதுக்குமே பிரயோஜனமில்லாம ஒதவாக்கரையா யிருக்கான்னு சொல்லுவீங்களே, இப்ப எப்படி இருக்கான்?

**குடை:** இப்ப அவன் பெரிய ஜோக்கராயிட்டான். இன்னொரு சோகாப்பையனோட சேர்ந்துகிட்டு ஜோக் கச்சேரி செய்து கிட்டிருக்கான். அவன் செலவுக்கு ஏதோ சம்பாதிச்சுக்கிட்டிருக்கான்.

மாவட்ட நூலக ஆணைக்குழு

**சுகுமார்:** ஜோக் கச்சேரி பண்றானா? பேரு?

**குடை :** நந்தகோபால்... சுருக்கி. நந்தான்னு வெச்சுக்கிட்டிருக்கான்.

**சுகு :** சுந்தா - நந்தாவா?

**குடை :** ஆமா. அந்த ரெட்டை கழுதைங்கதான்.

## காட்சி-8

# ஜெயராமன் வீடு

*(சுரேஷ் ஆபீசிலிருந்து வருகிறான்)*

***ஜெயராமன்:*** *உமாவை அழைச்சிண்டு வரலையா?*

**சுரேஷ் :** இல்லே.

**ஜெய :** *எதுக்கு அவளை அங்கேயே விட்டுட்டு வந்தே!*

**சுரேஷ் :** *மாமனார் ரொம்ப கேட்டுண்டார். அவ சிஸ்டரும் ஆசைப்பட்டா. உமாவும் ரெண்டு நாள் இருந்துட்டு வரேன்னா.*

**ஜெய :** *ஆபீஸ் என்னாறது?*

**சுரேஷ் :** *அங்கேருந்தே ஆபீஸ் போயிட்டு வருவா. என்னை டிரஸ் கொண்டு வந்து குடுக்கச் சொன்னா.*

**ஜெய :** *நல்ல உத்தியோகம்! வாஞ்சி உங்கிட்டே சாதாரணமா பேசிண்டிருந்தானா?*

**சுரேஷ் :** *ஏன் கேக்கறேள்?...* He is alright. *தான் பண்ணின தப்பை நெனச்சு ரொம்ப ஃபீல் பண்ணினார். உங்க கோவத்தை விட்டுட்டு நீங்க ஒருநாள் அங்கே சாப்பிட வந்தாதான் அவர் மனசு நிம்மதியா இருக்கும்னு நூறு தரம் சொல்லிட்டார்.*

**ஜெய :** *வாஞ்சிகிட்டே ஜாக்கிரதையாயிருக்கணும். அவன் பேசறதுக்கும் நடக்கறத்துக்கும்*

சம்பந்தமே இருக்காது. அவன் பழைய சரித்திரத்தை வெச்சு சொல்றேன்.

**சுரேஷ்:** பழசையே நினைச்சிண்டிருந்தா யாரோடையும் நார்மலா பழகவே முடியாதுப்பா. 'மனுஷா மாறவே மாட்டா, திருந்தவே மாட்டா'னு நினைக்கிறது ரொம்பத் தப்பு. அது positive thinking இல்லே...

**ஜெய :** என்னவோ உன் அதிர்ஷ்டம் எப்படியிருக்குன்னு பார்ப்போம். தன் பெண்ணைக் குடுத்துட்டு சுகுமாரனை வீட்டோட வெச்சிண்டு கொடுமைப் படுத்தறான் பாரு, இதே போலத்தான் தன் தங்கை அபிராமியை கல்யாணராமனுக்குக் கல்யாணம் பண்ணிக் குடுத்துட்டு பிஸினஸ் பண்றேன் பேர் வழின்னு அவன் கைலே இருந்த பணத்தை யெல்லாம் பிடிங்கிண்டு ஏமாத்திட்டான். திருப்பிக் கேட்டப்ப...

*முன்பு நடந்த நிகழ்ச்சி-1(Flash Back)*

**கல்யாணம்:** நான் குடுத்த ஐம்பதினாயிரம் ரூபாயைத் திருப்பித் தரேளா?

**வாஞ்சி:** ஐம்பதினாயிரம் ரூபாவா? பிஸினஸ்லே நஷ்டமாயிடுத்து. பணம் எங்கேருந்து வரும்?

**கல்யா :** திருப்பித் தரதா சொல்லி கடனாத்தானே வாங்கிண்டேள்?

**வாஞ்சி:** கடனா? உங்கிட்டே பணம் வாங்கிண்டேன்னு ஸ்டாம்ப் பேப்பர்லே கையெழுத்தா போட்டுக் குடுத்தேன்?

**கல்யா :** நான் குடுத்தது நாகராஜ ராவ்க்குத் தெரியும். அவர் எதிரிலே தானே குடுத்தேன்.

**வாஞ்சி:** அப்படியா? கோர்ட்லே கேஸ் போடு! ராயரைச் சாட்சிக்கு கூப்பிடு. வக்கீலையும் பேசச் சொல்லு. உன்பக்கம் ஜயிக்கிறதா பார்ப்போம்.

**கல்யா :** நான் சேர்த்து வெச்சிருந்ததை எல்லாம் உங்ககிட்டே தூக்கி குடுத்தேனே. இப்ப என் தலைலே பெரிய கல்லாத் தூக்கிப் போடறேளே! இப்படி அக்கிரமம் பண்றேளே...

நிகழ்ச்சி முடிகிறது

**ஜெய :** பாவம் கல்யாணராமன்! அந்த அதிர்ச்சியிலே அவனுக்கு மூளை சிதறிப் போய், பயித்திய மாவே ஆயிட்டான். அப்புறம் அவன் 'வய லெண்ட்டா' ஆயிட்டான். என்ன பண்றோம்னு தெரியாமே மனுஷாளை அடிக்கறதும் கடிக்கறதுமா ரொம்ப மோசமா ஆயிட்டான். ஒருநாள் அவன் பெண்டாட்டி...

முன்பு நடந்த நிகழ்ச்சி-2

**அபிராமி:** ஏன்னா, எப்ப பார்த்தாலும் கோவமாவே இருக்கேளே, எரிஞ்சு எரிஞ்சு விழறேளே... பணம் போனா போகட்டுமே, சம்பாதிச்சுண்டா போச்சு.

**கல்யா :** உன் அண்ணனை சம்பாதிச்சுண்டு வந்து குடுக்கச் சொல்லு. இல்லாமப் போனா உன்னை அடிப்பேன்.

அபிராமி: அடிப்பேளா?

கல்யா : அடிப்பேன்... கடிப்பேன் (கையை கடிக்கிறான். அபிராமி அலறுகிறாள். வாஞ்சி ஓடி வருகிறார்)

வாஞ்சி : இந்த வெறி பிடிச்ச நாயை இனிமே வீட்லே வெச்சுக்கக் கூடாது... (கையிலிருந்த கழியால் அடிக்கிறார்.)

அபிராமி: ஐயோ வேண்டாண்ணா, வேண்டாண்ணா! அவரை அடிக்காதே, என் பிராணன் போயிடும்.

நிகழ்ச்சி முடிகிறது

ஜெய : அன்னிக்கு வீட்டை விட்டுப் போனவன், தெருத் தெருவா அலைஞ்சி ஒருநாள் ஊரை விட்டே போயிட்டான். எங்கே போனான், என்ன ஆனான், இருக்கானா செத்தானான்னு கூட ஒருத்தருக்கும் தெரியாது. ஆம்படையான் விட்டுட்டுப் போனதிலிருந்து தங்கையை சமையல்காரி மாதிரி ட்ரீட் பண்ண ஆரம்பிச்சான் வாஞ்சி...

முன்பு நடந்த நிகழ்ச்சி-3

வாஞ்சி: சனியனே, சமையல் உள்ளே விழுந்து கிடக்கிறதுதானே? எதுக்கு ஹால்லே வந்து ஒக்காந்துண்டு அழுதிண்டிருக்கே...? இப்படி ஓயாமே மூக்கை சிந்திண்டு ஒக்காந்திருந்தியானா வீடு துடைச்சுப் போயிடும். பீடை... பீடை...

அபிராமி: என் ஜென்மம் இப்படியாயிடுத்தேன்னு நினைச்சு கண் கலங்கறது கூடவா தப்பு? நான்

இங்கே இருக்கிறது உனக்கு பாரமாயிருந்தா சொல்லிடு, சுகுமாரனை அழைச்சிண்டு இப்பவே போயிடறேன்.

**வாஞ்சி:** நீ எங்கேயாவது போய் சமைச்சுப்போட்டோ, இட்லி தோசைக்கு அரைச்சோ உன் வயித்தைக் கழுவிக்கோ... சுகுமாரனையும் இழுத்துண்டு போய் பட்டினி போட்டுக் கொன்னுடாதே. அவனை இங்கேயே விட்டுட்டுப் போ.

*நிகழ்ச்சி முடிகிறது*

**ஜெயராமன்:** ...அப்ப சுகுமாரனுக்கு ஒம்பத்து பத்து வயசு இருக்கும்னு நினைக்கிறேன். அவனை விட்டுட்டு, நடுக்காவேரி ஆச்ரமத்துக்கு போயிட்டா அந்த அம்மா. அதுக்கப்புறம் குடும்ப பாசமே இல்லாத யோகி மாதிரி ஆயிட்டா.

**சுரேஷ்:** குலம் கோத்திரம் பார்த்து, குடும்பத்தைத் தெரிஞ்சுண்டு கல்யாணம் பண்ணிக்கணும்னு நம்ம பெரியவா சொல்றதோட அர்த்தம் எனக்கு இப்பத்தான் புரியறது.

**ஜெயராமன்:** இப்பவாவது புரிஞ்சா சரி!

*(திரை)*

## காட்சி-9

## வாஞ்சி நாதன் வீடு

*(கௌரியும் உமாவும் பேசிக்கொண்டிருக்கிறார்கள்)*

*கௌரி: எப்படியோ உன் மாமனாரை உருட்டி மிரட்டி அப்பா உன்னை இங்கே வரவழைச்சுட்டார். ரெண்டு நாளா உன்னோட இருக்கிறது மனசுக்கு எவ்வளவு நிம்மதியா இருக்குத் தெரியுமா?*

*உமா : என்னது? உருட்டி மிரட்டினாரா? யார் சொன்னது?*

*கௌரி: 'பொண்ணைக் கொடுமை படுத்தறா' அப்படீன்னு போலீஸ் கம்ப்ளெயிண்ட் குடுப்பேன்னு அவாளை பயமுறுத்தினதா அப்பா சொன்னாரே?*

*உமா : சே... அத்தனையும் பொய். அங்கே வந்து ரெண்டு பேர் கால்லேயும் விழாத குறையா, தான் பண்ணினத்துக்கெல்லாம் மன்னிப்பு கேட்டுக் கெஞ்சியிருக்கார், தெரியுமா?*

*கௌரி: பாரேண்டி அப்பாவோட பொல்லாத்தனத்தை? சொந்தப் பொண்ணுகிட்டேயே பொய்யும், பித்தலாட்டமும் பண்ணிண்டு...*

*(வாஞ்சி இவர்கள் பேச்சைக் கேட்டுச் சிரிக்கிறார்)*

*கௌரி: உமா மாமனாரை உருட்டி மிரட்டி பயமுறுத்தி அவளை இங்கே அழைச்சுண்டு வந்ததா எங்கிட்டே ஏம்பா பொய் சொன்னேள்?*

**வாஞ்சி:** உங்கிட்டே மட்டுமா பொய் சொன்னேன்? உமா மாமனார்கிட்டேயும், சுரேஷ் கிட்டேயும் கூடத்தான் 'டுப்' விட்டேன். அந்தக் காலத்துலே கோமல்லே யாரையோ எதுக்கோ கழுதை மேலே ஏத்தி ஊர்வலம் விட்டதை வெச்சு ஒரு கதை சொல்லுவா. அதை வெச்சு, எங்க ரெண்டு பேர் தாத்தாக்களையும் கனெக்ட் பண்ணி நான் புதுசா ஒரு கதை விட்டேன். அதை அந்த தேரழுந்தூரான் அப்படியே நம்பிட்டான்!

**கௌரி:** பொய் சொல்லிட்டு சந்தோஷப் பட்டுக்கிறேளா?

**வாங்சி:** இதுக்குப் பேர் பொய் இல்லே - சாமர்த்தியம், சாதுர்யம், சமயோசித புத்தி, 'Diplomacy.' பின்னே என்ன, என் மேல இருக்கிற கோவத்துலே பெண்ணை பிடிச்சு வெச்சுக்கிறதா... இவனுக்கும், பொண்ணுப் பிள்ளைகளை பிடிச்சுண்டு போய் ஒளிச்சு வெச்சுண்டு பயமுறுத்திப் பணம் பறிக்கிற கொள்ளைக்காராளுக்கும் என்னடீ வித்தியாசம்? நான் அந்த வீட்டுக்குப் போனா காரியம் கெட்டு போயிடும்னு சொன்னியே... பார்த்தியா உங்கப்பன் வேலையை... எவ்வளவு ஈஸியா உமாவை ரிலீஸ் பண்ணி அழைச்சுண்டு வந்துட்டேன்.

**கௌரி:** பொய்யும் பித்தலாட்டமும் பண்ணி உமாவை அழைச்சுண்டு வந்துட்டேன்னு பெருமைப் பட்டுக்கிறேளே, வெக்கம் மானமே இல்லியா உங்களுக்கு? சே... நாளைக்கே இது அவாளுக்குத்

தெரிஞ்சா, உமா கதி என்ன? இனிமே நாங்க யாராவது அங்கே தலைகாட்ட முடியுமா?

**வாஞ்சி:** என்ன சொன்னே? பெத்த அப்பனையே அகௌரவமா பேசறியா? உடம்புலே அத்தனை திமிர்! தங்கறதுக்கும் இடம் கொடுத்து, சோறு போடறேன் பாரு, அந்தக் கொழுப்பு.

**கௌரி:** (குழறி) என்னது? எனக்கு நீங்க சோறு போடறேளா? எனக்கு ஆம்படையான் இருக்கார். அவர் உத்தியோகம் பார்க்கிறார். சம்பாதிச்சிண்டு வந்து உங்களுக்கும் சேர்த்துக் கொட்டறார்.

**வாஞ்சி:** அந்த உத்யோகத்தை எந்த மாமனார் அவனுக்கு வாங்கிக் கொடுத்தான்? இந்த மாமனார். (மார்பைத் தட்டுகிறார்) தெரிஞ்சுக்கோ... நான் போடற பிச்சை, நீ தின்னுண்டிருக்கே.

**கௌரி:** நீங்களும் அந்தப் பிச்சை சோத்தைத்தான் தின்னுண்டிருக்கேள், ஞாபகம் இருக்கட்டும்.

**வாஞ்சி:** என்னடீ சொன்னே... கழுதை... (கையை ஓங்குகிறார்.)

(உமா வந்து குறுக்கே நிற்கிறாள்)

**உமா :** என்னப்பாது கையெல்லாம் ஓங்க ஆரம்பிச்சுட்டேள், ஓஹோ?

(சுஜாதா வருகிறாள்)

சுஜாதா: தாத்தா, you are very bad. அம்மாவை அடிச்சா போலீஸ்மாமா கிட்டே சொல்லிடுவேன்.

வாஞ்சி: நீ பேசாம உள்ளே போம்மா!

சுஜாதா: மாட்டேன். உள்ளே போனா அம்மாவை நீங்க அடிப்பேள்.

கௌரி: சனியனே, உன்னை யார் இப்ப மத்யஸ்தத்துக்கு கூப்பிட்டா. எங்கேயாவது ஒழிஞ்சுப் போ!

(முதுகில் அறைகிறாள். அழுது கொண்டே உமா விடம் வருகிறாள்)

உமா : நீ எதுக்கு குழந்தையைப் போட்டு பேய் மாதிரி அறையறே... (குழந்தையை அணைத்துக் கொள்கிறாள்.)

(சுகுமார் வருகிறான்)

சுஜாதா: அப்பா... அம்மா என்னை அடிச்சுட்டா.

சுகு : எதுக்கு குழந்தையைப் போட்டு அடிக்கறே? பாவம்.

வாஞ்சி : உன் பொண்டாட்டிக்கு என்மேலே ஆத்திரம். என்னை அடிக்க முடியலே. ஆங்காரத்துலே குழந்தையை போட்டு அடிக்கறா.

சுகு : என்ன நடந்தது கௌரி?

கௌரி: எல்லாம் உங்களாலேதான். உங்களுக்கு கொஞ்சம் மானம் பொறந்ததுன்னா எனக்கு விடிவு காலம் பொறக்கும்.

COMICS PDF TIMES

வாஞ்சி: அவளுக்கு ஒரே ஒரு ஆசைதாண்டா... என்னை சோத்துக்கு திண்டாட விட்டுட்டுத் தனியா போயிடணும். நீ சம்பாதிச்சுண்டு வந்து கொட்றயாம். வெக்கம் மானம் இல்லாம பிச்சைக்காரனாட்டம் நான் அந்த சோத்தை தின்னுண்டு இருக்கேனாம்; சொல்லிக் காட்றாடா.

உமா : ஐயயோ, கௌரி இப்படி எங்கேப்பா சொன்னா?

வாஞ்சி: உன் அக்கா பேசறதோட அர்த்தமெல்லாம் எனக்குத்தான் புரியும். நீ பேசாம இரு.

சுகு : கௌரீ, கடைசி தரமா சொல்றேன். நீ மாமாவை மரியாதை இல்லாம பேசறதை நான் இனிமே பொறுத்திண்டிருக்க மாட்டேன். அவரை விட்டுத் தனியாவும் வரமாட்டேன். அந்த எண்ணத்தை கம்ப்ளீட்டா விட்டுடு.

வாஞ்சி: சுகுமாரா, உனக்கும் 'ஃபைனலா' சொல்லிட றேன். தனியா போய் குடித்தனம் நடத்தணும்னு கௌரிக்கு ஆசையாயிருந்தா தாராளமா போ. என்னைப்பத்திக் கவலைப்படாதே. உன் குடும்பத்தை நீ பாத்துக்கோ... நீங்க எங்கேயாவது சந்தோஷமாயிருந்தா போதும் எனக்கு.

கௌரி : குட்டி போட்ட பூனை மாதிரி மாப்பிள்ளை இவர் காலையேதான் சுத்திசுத்தி வந்திண்டிருப்பார்னு நன்னா தெரிஞ்சுண்டு, மகா சாது மாதிரி, கபடத்தனமா 'அட்வைஸ்' பண்றதை பார்த்தாயாடி உமா?

வாஞ்சி: என்னடீ சொன்னே! துடைப்பக்கட்டை பிஞ்சிடும். (கையை ஓங்குகிறார்)

(சுரேஷ் வருகிறான்)

உமா : அப்பா, மாப்பிள்ளை வந்திருக்கார்.

வாஞ்சி: (சிரித்து மழுப்பி) வாங்கோ மாப்பிள்ளை, சௌக்கியமா? அப்பா சௌக்கியமா? ஒக்காருங்கோ... உமா, மாப்பிள்ளைக்கு காபி டிபன் கொண்டு வா.

சுரேஷ்: அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம். நான் உமாவை வீட்டுக்கு அழைச்சுண்டு போக வந்தேன்.

வாஞ்சி: இதுக்காக நீங்க வருவானேன்? நானே கொண்டு வந்து விடறேனே.

சுரேஷ்: இல்லே சார், உமாவுக்கு அங்கே கொஞ்சம் வேலை இருக்கு. நீ வரயா உமா?

உமா : நான் ரெடி.

வாஞ்சி : வேலை இருக்கலாம், அவளும் ரெடியா யிருக்கலாம். ஆனா, இன்னிக்கும் நாளைக்கும் பரணி, கிருத்திகை. கல்யாணம் ஆயி முதல் தரம் வீட்டுக்கு வந்திருக்கா. கரி நாள்லே போவானேன்? இரண்டு நாள் கழிச்சு கொண்டு வந்து விடறேன்.

சுரேஷ்: கோயில்லே அபிஷேகம் இருக்காம், இவளும் இருக்கணும்னு அப்பா சொன்னார்.

வாஞ்சி: கோயில்னா அபிஷேகம், ஆராதனை இல்லாம இருக்குமா... அப்பாகிட்டே நான் சொன்னேன்னு சொல்லுப்பா... கேப்பார், நல்லவர்.

சுரேஷ் : சரி, அப்புறம் உங்க இஷ்டம். நான் வரேன்.

சுகு : இதோ பாருங்கோ...

சுரேஷ் : நான் எதையும் கேட்கத் தயாரா இல்லே.

(போகிறான்.)

உமா : ஐயையோ! மாப்பிள்ளை கோவமா போறாரே!

வாஞ்சி: போகட்டுமே. இவன் கோவத்துக்கு எவன் பயப்படப்போறான். உன்னைப் பிடிச்சு வெச்சுண்டா நான் பயந்து, சரணாகதின்னு அவன் கால்லே விழுந்துடுவேன்னு நினைச்சான் இந்தத் தேரழுந்தூர் ஜயராமன். கடைசிலே அவன்தான் ஏமாந்தான். ஏதோ பேசி உமாவை இங்கே அழைச்சிண்டு வந்துட்டேன். இப்ப மறுபடியும் ஏமாறப் போறான்.

உமா : என்னப்பா சொல்றேள்?.

வாஞ்சி: ரெண்டு நாள் கழிச்சு உன்னை அங்கே கொண்டுவிடப் போறதில்லை!

உமா : பின்னே எப்போ கொண்டுபோய் விடப்போறேள்?

வாஞ்சி: அவங்க இங்கே வந்து தாங்க பண்ணின தப்புக்காக கன்னத்துலே போட்டுண்டு மன்னிப்புக் கேக்கற

வரைக்கும் நான் உன்னை அங்கே அனுப்பப் போறதில்லே... அதுக்காகத்தான் இங்கே அழைச்சிண்டு வந்தேன்.

கௌரி : இது ஏதோ அனர்த்தத்துலே தாய் போய் முடியப் போறது.

வாஞ்சி : என்ன ஆனாலும் சரி! இந்த நன்னிலம் வாஞ்சிநாதன் யாருன்னு இந்த அயோக்கியப் பயல்களுக்கு காட்டறேனா இல்லியா பாரு!

## காட்சி-10

## தெரு

*(நந்தா நின்று கொண்டிருக்க, சுந்தா கோபமுடன் வருகிறான்.)*

நந்தா : என்ன, அந்த ஆட்டோ டிரைவரோட ஒரே தகராறு?

சுந்தா : மீட்டருக்கு மேலே அஞ்சு ரூபா போட்டு குடுக்க சொல்றாம்ப்பா.

நந்தா : மீட்டருக்கு மேலே ஒரு ரூபா ரெண்டு ரூபா கேக்கறதுதான் வழக்கம். அஞ்சு ரூபாயா? அநியாயமாயிருக்கே, எதுக்கு?...

சுந்தா : இந்த பயங்கர டிராபிக்லே ஆக்ஸிடெண்ட் ஆகாமே உசிரோட அழைச்சுக்கிட்டு வந்து சேர்த்தானே, அதுக்கு எக்ஸ்ட்ரா அஞ்சு ரூபா குடுக்கக் கூடாதாங்கறாரு!... எப்படியிருக்கு பார்த்தியா காலம்?

நந்தா : நல்லாயிருக்கே ஜோக்! பையிலே போட்டுக்கிறேன். அடுத்த கச்சேரியிலே வெச்சுக்கலாம்.

சுந்தா : மீட்டருக்கு மேலே அஞ்சு ரூபா அழுதுட்டு வந்து நிக்கறேன். உனக்கு ஜோக்கா இருக்கா?

(சுஜாதா வருகிறாள்)

நந்தா : என்னம்மா, ஸ்கூல் போறயா?

சுஜாதா: ஆமா. ஒரு புதிர் போடறேன், சொல்றீங்களா? தண்ணிலே கரையற பூ எது?

சுந்தா: இது ஒண்ணுதான் உனக்குத் தெரியுமா... அன்னிக்கும் இதையே கேட்டியே! தண்ணீலே கரையற பூ உப்பூ.

சுஜாதா: அதான் இல்லே... தண்ணியிலே கரையற பூ சோப்பு!

நந்தா : தம்மாத்தூண்டா இருந்துக்கிட்டு இது நம்மளையே டபாய்க்குது பார்த்தியாடா?

சுஜாதா: போனா போகட்டும். இதைச் சொல்லுங்க! வேடந்தாங்கல் ஏரிக்கு வருஷா வருஷம் நிறைய பறவைங்க வருதே, அதெல்லாம் எங்கேருந்து வரது சொல்லுங்க, பார்க்கலாம்.

நந்தா: அதெல்லாம் எந்த எந்த நாட்டுலேருந்தோ வருதுங்க. அது யாருக்குத் தெரியும்?...

சுஜாதா: நான் சொல்லட்டுமா? எல்லா பறவைகளும் முட்டையிலேருந்து தான் வருதுங்க... ஏமாந்தீங்களா?

சுந்தா : போடா கோழி முட்டை. இது கூடவா தெரியலே? (நந்தாவின் தலையில் அடிக்கிறான்)

## காட்சி-11

## (ஜெயராமன் வீடு)

ஜெய : நேத்தே வாஞ்சி உமாவை கொண்டு வந்து விடறதா சொன்னாரே, இது வரைக்கும் வரலையே...

சுரேஷ்: இன்னிக்கும் உமா ஆபீஸுக்குப் போன் பண்ணினேம்ப்பா... அவ ஒரு வாரம் லீவுன்னு ஆபரேடர் சொன்னா. அப்புறம் சுகுமாரனுக்கு போன் பண்ணி கேட்டேன். போன்லே பேச வேண்டாம்... நேர்லே வந்து சொல்றேன்னார்... அவளுக்கு உடம்பு கிடம்பு சரியாயில்லியோ என்னவோ... எனக்கு கூட போன் பண்ணலே...

(நாகராஜ ராவ் வருகிறார்)

ஜெய : என்ன ராவ்ஜி, அதிசயமாயிருக்கு... இவ்வளவு தூரம் வந்துட்டீங்க?

ராவ் : பெருங்களத்தூர்லே சின்னதா ஒரு வீடு கட்றேன்... இன்னிக்கு ஸீலிங் போடறாங்க. பார்க்க வந்தேன். அப்படியே உங்களையும் பார்த்துட்டுப் போகலாம்னு நுழைஞ்சேன்.

சுரேஷ் : சார், மாமனார் வீட்லே எல்லாரும் சௌக்கியமா?

ராவ் : சௌக்கியம்தான்.

சுரேஷ்: உமா ஒரு வாரமா ஆபீஸுக்கு லீவாமே? உடம்புக்கு ஒண்ணும் இல்லியே?

ராவ் : உடம்புக்கு ஒண்ணுமில்லே... ஆனா, ஆபீசுக்கு லீவு போட்டிருக்கிறதா சொன்னா...

சுரேஷ்: ஏன்...?

ராவ் : அது வந்து... லீவு போடலே... அவங்க அப்பா தான்...

(சுகுமாரன் வருகிறான்)

ராவ்: (அசடு வழிந்து) அடடே... சுகுமாரே வந்துட்டாரே... நான் புறப்படறேன்.

ஜெய : என்னிக்கோ ஒரு நாள் வரேள்... இருங்க சார் போகலாம்...

ராவ் : இல்லேல்லே... நீங்க குடும்ப சமாசாரம் பேசுவேள்... வெளி மனுஷன் நான் எதுக்கு இங்கே....? சுகுமார்! என்னை இங்கே பார்த்ததா உங்க மாமனார் கிட்டே சொல்லாதீங்கோ.

(புறப்படுகிறார்)

சுகு : ராவ்ஜி சார்... நீங்களும் என்னை இங்கே பார்த்ததா மாமாகிட்டே சொல்லிடாதீங்கோ, ப்ளீஸ்.

ராவ் : டோண்ட் ஒர்ரி... இருபது வருஷத்துக்கு மேலே மாமாவோட பழகறேனே, இது கூடவா எனக்குத் தெரியாது...?

ஜெய : என்ன விஷயம் சுகுமார்...?

சுகு : ஒண்ணுமில்லே...

சுரேஷ் : சொல்லுங்கோ... என்ன நடந்தது? ஏன் உமா இங்கே வரலே?

சுகு : மாமா இன்னும் கொஞ்சநாள் அவளை அங்கே இருக்கச் சொல்லியிருக்கிறார்.

ஜெய : எதுக்கு...?

சுகு : தெரியலே...

சுரேஷ் : என்ன காரணம்? ஆபீசுக்கு எதுக்கு லீவு போட்டிருக்கா...?

சுகு : மாமாதான் அவளை லீவு போடச் சொல்லியிருக்கார்.

ஜெய : ஏன்?

சுகு : தெரியலே...

ஜெய : என்ன எதைக் கேட்டாலும் தெரியலே தெரியலேங்கறே?

சுகு : அதை எப்படிச் சொல்றதுன்னு தெரியலே...!

ஜெய : நீ அவரைக் கேக்கறதுதானே... உனக்கு பொறுப்பு இல்லே? நீ அவர்கிட்டே பயந்து பயந்து சாகறே... அதான் அவர் துளுத்துப் போறார்.

சுகு : சின்ன வயசுலேர்ந்தே அவரை எதிர்த்துப் பேசிப் பழக்கமில்லே சார்...

ஜெய : இனிமேயாவது பழக்கப்படுத்திக்கோ, போ. வாஞ்சியோட அடாவடித்தனத்துக்கும்

அக்கிரமத்துக்கும் ஒரு முடிவு கட்டித்தான் ஆகணும்... எத்தனை நாள் அவர் துஷ்டத்தனத்தையெல்லாம் நீ வாயை மூடிண்டு வேடிக்கை பார்த்துண்டிருக்கப்போறே...?

சுகு : சார், என் நிலைமையைக் கொஞ்சம் புரிஞ்சுக் கோங்கோ... அநாதையாயிட்ட என்னை வளர்த்து ஆளாக்கினவரே என் மாமாதான்.

ஜெய : உன் அப்பா அம்மாவை வீட்டை விட்டுத் துரத்திட்டு உன்னை அநாதையாக்கினவரே உன் மாமாதானே...

(சுகுமார் கண்களை துடைத்துக் கொள்கிறான்.)

ஜெய : அழுது பிரயோஜனமில்லேப்பா... இவ்வளவு பெரிய ஆம்பளையா வளர்ந்துட்டப்புறம் நீ உன் மாமாவை-உன் முரட்டு மாமனாரை-எதிர்த்து ஒரு வார்த்தை கேக்கணும்... அவரை ஒரு உலுக்கு உலுக்கணும்... நான் இருக்கேன், பயப்படாதே.

சுகு : நான் சொன்னா அவர் எதுவுமே கேக்கமாட்டார். நான் கேட்டா அவர் ஒண்ணுமே சொல்ல மாட்டார்!

ஜெய : அப்படின்னா உன் பொண்டாட்டி குழந்தையை அழைச்சிண்டு தனியா போயிடு... கௌரிக்கும் அதான் ஆசைன்னு உமா சொல்லிண்டிருந்தா...

சுகு : அது என்னாலே முடியாது. சாகறவரைக்கும் நான் அவரோடத்தான் இருப்பேன்...

ஜெய : அவர் சாகறவரைக்குமா? நீ சாகறவரைக்குமா?

சுரேஷ் : அப்பா உங்களுக்கு ஏன் இவ்வளவு கோபம் வரது? மிஸ்டர் வாஞ்சிநாதன் மேலே இருக்கிற ஆத்திரத்தை ஏன் பாவம் இவர்மேல் காட்டறேள்? இது இவர் பர்ஸனல் மேட்டர்... நீங்க விட்டுடுங்கோ.

ஜெய : உன் பர்ஸனல் மேட்டர் என்னப்பா ஆறது? உமாவை பிடிச்சு வெச்சிண்டு இங்கே அனுப்ப மாட்டேங்கறானே வாஞ்சி...

சுகு : நீங்க அப்ப அவளை இங்கே பிடிச்சு வெச்சுண்டேளாம்! அதுக்குத்தான் இப்ப பழி தீர்த்திருக்கிறாராம்.

ஜெய : ஓஹோ - ரிவெஞ்சா? நான் கோர்ட்டுக்கு போவேன். ஹேபியஸ் கார்ப்பஸ் போடுவேன். ஜட்ஜுக்கு முன்னாலே உமாவைக் கொண்டு வந்து நிறுத்தச் சொல்வேன்...

(பெட்டியுடன் உமா வருகிறாள்)

சுரேஷ் : வா உமா.

ஜெய : வாம்மா. உங்கப்பா எங்கே? (வெளியே எட்டிப் பார்க்கிறார்)

உமா : அப்பா வரலே. நான் மட்டும் தான் வந்தேன்.

ஜெய : ஏன் பெரிய மனுஷனுக்கு ஒழியலையாமா?

உமா : அவர் என்னை அனுப்பலே... நானாவேதான் வந்தேன். நான் புறப்பட்டு வந்ததே அவருக்குத் தெரியாது.

*சுரேஷ் :* *என்னாச்சு உமா?*

*உமா :* *சொல்றேன், உள்ளே வாங்கோ...*

*(இடைவேளை)*

## காட்சி-12

## வாஞ்சிநாதன் வீடு

*வாஞ்சி :* *உமா எங்கே? ஆபீஸ் போயிருக்காளா?*

*கௌரி :* *இல்லே, தாம்பரத்துக்குப் போயிட்டா.*

*வாஞ்சி :* *யாரைக் கேட்டுண்டு இந்த வீட்டை விட்டுப் போனா உன் தங்கை?*

*கௌரி :* *யாரைக் கேக்கறேள்...?*

*வாஞ்சி :* *உன்னைத்தான் கேக்கறேன்... நீ போயிட்டு வான்னு சொன்னியா?*

*கௌரி :* *எங்கிட்டே வந்து தாம்பரத்துக்கு போகட்டுமான்னு அவ ஒண்ணும் பர்மிஷன் கேக்கலே... போயிட்டு வரேன்னு இன்ஃபர்மேஷன் தான் சொன்னா. அப்பாகிட்டே சொல்லிட்டுப் போயேன்னு சொன்னேன். நீ வேணும்மானா சொல்லிக்கோன்னு சொல்லிட்டு விர்ரென்னு கிளம்பிப் போயிட்டா.*

*வாஞ்சி :* *பொய் சொல்றே. 'நீ போடி... அப்பா என்ன செஞ்சுடறார்னு பார்த்துடலாம்'னு நீ தைரியம் சொல்லியனுப்பிருப்பே.*

கௌரி: உமா சொல்லிண்டு போறச்சே நாகராஜ ராவ் வாசல்லேதான் நின்னுண்டிருந்தார்... அவரை நீங்களே கேட்டுப் பாருங்கோ.

வாஞ்சி: நாகராஜ ராவ்... ஓய் ராயரே... (ஓடி வருகிறார்) உமா தாம்பரம் போறச்சே நீங்க வேடிக்கை பாத்திண்டிருந்தேளாமே?

நாகராஜராவ்: நான் தாம்பரம் போயிட்டு வரேன் மாமான்னு சொன்னா. சௌக்கியமா போயிட்டு வாம்மான்னு சொன்னேன்.

வாஞ்சி: எனக்குத் தெரியாம என் பர்மிஷன் இல்லாம திருட்டுத்தனமா அவ அங்கே போயிருக்கா. மகராஜியா போயிட்டுவாம்மான்னு நீங்க ஆசிர்வாதம் பண்ணியனுப்பறேளே... மனசுலே என்னன்னு நினைச்சுண்டிருக்கேள்?

ராவ் : அட ராகவேந்திரா! அவ உங்க இஷ்டம் இல்லாம போனாள்னு எனக்கு எப்படித் தெரியும்?

வாஞ்சி: இருப்பத்திநாலு மணிநேரமும் வீட்டுலேயே ஒக்காந்திண்டிருக்கேளே, முன் போர்ஷன்லே என்ன நடக்கிறதுன்னு கூடத் தெரியாம அப்படி என்னய்யா பண்ணிண்டிருக்கேள்?

(குடை நாயுடு வருகிறார்)

(கௌரி உள்ளே போகிறாள்)

குடை: என்ன ராவ்ஜியை போட்டுப் புரட்டி எடுத்துக்கிட்டிருக்கீங்க?

வாஞ்சி: ஒண்ணுமில்லே...

ராவ் : இதைக் கேளுங்க நாயுடு... உமா வந்து...

வாஞ்சி: ராயரே முன் போர்ஷன்லே என்ன நடந்தா உங்களுக்கு என்ன, உங்க வேலையைப் பார்த்துண்டு போங்கோ. (போகிறார்)

குடை : என்ன இன்னிக்கு ரொம்ப சூடா இருக்கீங்க?

வாஞ்சி: உமாவை கொஞ்ச நாள் இங்கே பிடிச்சு வெச்சிண்டு அவங்களை அழவைக்கணும்னு நினைச்சிண்டிருக்கேன்னு உங்ககிட்டே சொன்னேன் இல்லியா? நான் வீட்டிலே இல்லாத சமயம் பார்த்து பொட்டியைத் தூக்கிண்டு அங்கே போயிட்டா கழுதை... ஒரு பொண்ணு அப்பனுக்குத் தெரியாம கள்ளத்தனமா வீட்டை விட்டு ஓடினா கோவம் வராம இருக்குமா... (குடை சிரிக்கிறார்)

வாஞ்சி : என்ன சிரிப்பு?

குடை: உமா என்ன கள்ளக்காதலனோடயா ஓடிப் போயிட்டா... அப்பன் சம்மதத்தோட கல்யாணம் பண்ணிக்கிட்ட காதலன் வீட்டுக்குத்தானே போயிருக்கா? காதலர்களை பிரிச்சு வெக்கறது பாவம்னா, காதலிச்சுக் கல்யாணம் செய்துகிட்ட கணவன் மனைவியைப் பிரிச்சு வெக்கறது ரொம்ப ரொம்ப பாவம், தெரியுமா?

வாஞ்சி : பாவ புண்ணியத்தைப் பத்தி உங்களைக் கேக்கலே, உமா பண்ணினது நியாயம்ங்கிறீங்களா?

குடை: நீங்க உமாவை இங்கே பிடிச்சு வெச்சுகிட்டது நியாயம்னா, அவ அங்கே போனதும் நியாயம் தான். நீங்க செஞ்சது அநியாயம்னு நீங்க ஒத்துக்கிட்டீங்கன்னா, உமா செஞ்சது அநியாயம்னு நான் ஒத்துக்கறேன்... வாஞ்சி நாதன், மத்தவங்க நம்பளை மதிக்கறவரைக்கும் தான் நம்ப ஜம்பமெல்லாம் பலிக்கும். 'அட போடா'ன்னு தூக்கி கடாசிட்டாங்களோ, அப்புறம் வாயடைச்சுப் போய் ஒரு மூலைலே முடங்கி ஒக்காந்துக்க வேண்டியதுதான். நம்ம மரியாதையையும் மானத்தையும் காப்பாத்துக் கிறது நம்ப கையிலேதான் இருக்கு.

வாஞ்சி: உங்க பொன்மொழியா? இதை எழுதி அதுக்குக் கீழே குடை நாயுடுனு போட்டு டி.வி.க்கு அனுப்புங்கோ... அப்பப்ப போட்டு காட்டுவா... அதுக்குத் தான் லாய்க்கு... அப்புறம் என்ன நியூஸ்?

குடை : போன வாரம் குரோம்பேட்டை குமரன் குன்றம் முருகன் கோயிலுக்கு போயிருந்தேன். இப்ப ரொம்ப பிரமாதமா ஆயுடுச்சு. அன்னிக்கு எலெக்ட்ரிக் ட்ரெயின்லே உங்க தங்கை புருஷன் கல்யாண ராமனைப் போலவே ஒருத்தரைப் பார்த்தேன். வயசாயி, இளைச்சுப் போயிருந்தா லும் பழைய ஜாடை நல்லா தெரிஞ்சுது. என்னை அவர் முறைச்சு முறைச்சுப் பார்த்தார். 'நீங்க கல்யாணராமன் தானே?'ன்னு கேட்டேன்.

பதிலே பேசலே, 'வாஞ்சிநாதன் தங்கை புருஷன் தானே?'ன்னு கேட்டேன். இல்லேன்னுட்டாரு.

**வாஞ்சி:** நீங்க யாரையோ பார்த்து கேட்டா அவர் வேறே எப்படி பதில் சொல்வார்? கல்யாணராமனை பார்க்கணும்னா நீங்க நேரே நரகத்துக்குப் போயிட்டு வரணும். அவர் அங்கே போய் எத்தனையோ வருஷம் ஆறது...

**குடை :** அடடே அப்படியா? அவர் இறந்துட்ட சேதியே எனக்குத் தெரியாதே... உங்க தங்கச்சி அதே ஆச்ரமத்திலே தான் இருக்காங்களா... நல்லா இருக்காங்களா...?

**வாஞ்சி:** அவளைப்பத்தி எனக்கு ஒண்ணுமே தெரியாது. அவ எக்கேடு கெட்டுப் போனா எனக்கு என்ன?

**குடை :** மனுஷன் விடவேண்டியது ரெண்டு. ஒண்ணு ஆசை. இன்னொண்ணு கோபம். ரெண்டையும் விட்டால் உலகத்தை ஜயிக்கலாம்.

**வாஞ்சி:** ரெண்டாவது பொன் மொழியா? நீங்க நிச்சயமா டி.வி. ஸ்டேஷனுக்குப் போகவேண்டியவர் தான், போயிட்டு வாங்க... (கும்பிடுகிறார்)

## காட்சி-13
## ஜெயராமன் வீடு

*(அறுபது வயது கிழவர் ஒருவர் வருகிறார்)*

***ஜெயராமன்:*** *வாங்கோ, யாரு தெரியலையே?*

***வந்தவர்:*** *கொஞ்சம்கூட தெரியலையா? நன்னா பாருங்கோ.*

***ஜெய :*** *(பார்த்து) கேட்ட குரல் மாதிரி இருக்கு.*

***வந்தவர்:*** *கல்யாணம்... கல்யாணராமன்.*

***ஜெய :*** *எந்த கல்யாணராமன்?*

***வந்தவர்:*** *கதிராமங்கலம் கல்யாணராமன்.*

***ஜெய :*** *நன்னிலம் வாஞ்சிநாதனோட தங்கைப் புருஷனா?*

***கல்யாணம்:*** *ஆமா, அந்த துரதிர்ஷ்டம் பிடிச்சவன் தான்.*

***ஜெய :*** *நம்பவே முடியலியே... தப்பா நினைச்சுக்காதீங்கோ. நீங்க போயிட்டதாகவே நினைச்சுண்டிருந்தேன். எல்லாருமே அப்படித் தான் சொன்னா. இத்தனை வருஷம் எங்கே இருந்தேள்?*

***கல்யாணம்:*** *எங்கெங்கேயோ இருந்தேன். நான் சுத்தின ஊர்கள் பேர் எனக்கே தெரியாது. கடல் கடந்து கூட போயிட்டு வந்தேன். ஒரு பயித்தியக்கார ஆஸ்பத்திரிலே இருந்து வெளியே வந்தது ஞாபகம் இருக்கு. அங்கே எத்தனை வருஷம்*

இருந்தேன்னு தெரியாது. அப்புறம் அநாதை விடுதியிலே இருந்தேன்... பிளாட்பாரத்திலே படுத்துண்டிருந்தேன்... தெருத் தெருவா பிச்சை எடுத்துண்டிருந்தேன்... எப்படியோ உங்க வீட்டைக் கண்டு பிடிச்சுண்டு வந்திருக்கேன்.

**ஜெய** : வாஞ்சி வீட்லேதான் இருக்கேளா?

**கல்யாணம்:** இல்லேல்லே. நான் வந்திருக்கிறதே அந்தக் கிராதகனுக்குத் தெரியவேண்டாம். நடந்ததெல்லாம் உங்களுக்குத் தெரியும்னு நினைக்கிறேன்.

**ஜெய** : நன்னா தெரியும்... அவன் உருப்பட மாட்டான்!

**கல்யாணம்:** தப்பு... தப்பு... அக்கிரமக்காரன் தான் உருப்படுவான். மோசம் பண்றவன்தான் மாடி வீட்டிலே வசதியா இருப்பான். என்னைப்போல் பணம் குடுத்து ஏமாந்தவன் நடுத்தெருவிலே இருப்பான். என் பெண்டாட்டியும், பிள்ளையும் உயிரோட இருக்காளா?

**ஜெய** : இருக்காளே!

**கல்யாணம்:** சௌக்கியமா இருக்காளா?

**ஜெய** : சௌக்கியமாத்தான் இருக்கா.

**கல்யாணம்:** நான் அவாளை பார்க்க முடியுமா...? ஏற்பாடு பண்றேளா?

**ஜெய** : ஆகா... கவலைப் படாதீங்கோ... ரொம்ப களைச்சுப் போயிருக்கேள்... மொதல்லே

கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்கோங்கோ... எல்லா விவரமும் சொல்றேன்... மேற்கொண்டு என்ன பண்ணலாம்னு யோசனை பண்ணுவோம்.

**கல்யாணம்:** ஜெயராமன்! எனக்கு ரொம்ப பசிக்கிறது. நேத்து மத்தியானம் டிபன் சாப்பிட்டது.

**ஜெய :** ச்சுச்சூ... நீ உள்ளே வாங்கோ... அந்தப் பையை இப்படிக் கொடுங்கோ!

(அழைத்துச் செல்கிறார்)

## காட்சி-14
## ஜெயராமன் வீடு

(ஜெயராமனும், சுகுமாரனும்)

**சுகுமாரன்:** நீங்க சொல்றதை என்னாலே நம்பவே முடியலே சார்... செத்துப் போனவா பிழைச்சு வந்ததா கதைசொல்லுவா கேள்விப்பட்டு இருக்கேன். இதுவும் அது மாதிரிதான் இருக்கு. எங்கப்பாவை மறுபடியும் பார்க்கப் போறேன்னு நினைச்சாலே உடம்பெல்லாம் என்னவோ பண்றது.

**ஜெய :** நம்ப முடியாத ஆச்சரியங்களா நடத்திக் காட்டித்தாம்பா தெய்வம் தான் இருக்கறதை நமக்கு அப்பப்ப நிரூபிச்சுக் காட்டிண்டிருக்கு.

**சுகு :** அப்பா எப்படி இருப்பார்ன்னு கூட என்னாலே கற்பனை செஞ்சுப் பார்க்க முடியலே... அவர் ஏன் எங்க வீட்டுக்கு வரலே?

ஜெய : இதோ பாரு சுகுமார். உங்க வீட்டுக்கு வர உங்கப்பா பிரியப்படலே. உன் மாமனார் மூஞ்சிலேயே முழிக்கப்போறதில்லேங்கறார்.

சுகு : எனக்கு என்ன பண்றதுன்னே புரியலே சார்...

ஜெய : என்னை கேட்டயானா... உங்கப்பாவை நீ எங்கேயும் போக விடக்கூடாது. அவருக்கு உடம்பு சரியில்லே. அவரை உன்னோடத்தான் வெச்சிண்டாகணும்.

சுகு : மாமாகிட்டே பேசிப் பார்க்கிறேன்.

ஜெய : இதே பாரு... உங்கப்பா விஷயத்தைப் பத்தி உன் மாமனார்கிட்டே பேசி ஒரு பிரயோஜனமும் இல்லே. அவர் மனசு மாறி உங்கப்பாவை அழைச்சுக்க ஒத்துண்டாலும், உங்கப்பா கண்டிப்பா வரமாட்டார். நீ தனியா ஒரு வீடு பார்த்துண்டு உங்கப்பாவையும், அம்மாவையும் அழைச்சுண்டு போய் குடித்தனம் வைக்கிற வழியைப் பார். அது தான் முறை. இது தெய்வமா குடுத்திருக்கிற நல்ல சந்தர்ப்பம். அந்த ஜெயில்லேர்ந்து தப்பிச்சுண்டு வந்துடு!

(கல்யாணராமன் வெளியிலிருந்து வருகிறார்)

ஜெய : சுகுமார், உங்கப்பா வந்திருக்கார் பார். கல்யாணராமன், இவன் தான் உங்க பிள்ளை சுகுமார்.

(ஒருவரை ஒருவர் ஒரு கணம் பார்த்துக் கொள்கின்றனர்.)

(கல்யாணராமன் மெள்ள நடந்து வந்து சுகுமாரின் தலையை வருடி, கன்னத்தைத் தடவி, கைகளைத் தொட்டுப் பார்க்கிறார்.)

கல் : பையா, உன்னைப் பார்த்து ஒரு யுகம் ஆன மாதிரி இருக்கு... என்னை தெரியறதாடா உனக்கு?

சுகு : நன்னா தெரியறது...! போனவாரம் தானே பார்த்தேன்.

ஜெய : போன வாரம் பார்த்தியா?

(முன்பு நடந்த நிகழ்ச்சி)

கல் : சார், எனக்கு வீடு வாசல் இல்லே... பெண்டாட்டி இல்லே. எங்கிட்டேயிருந்த பணத்தை ஒருத்தன் அடிச்சிண்டு போயிட்டான். கைலே பைசா இல்லே. நிர்கதியா நிக்கறேன். ரொம்ப பசிக்கிறது...

சுகு : சரி... சரி... இப்படி சொல்லிண்டு பட்டணத்துலே ரொம்ப பேர் சுத்திண்டிருக்கா... போயிட்டு வாங்கோ.

கல் : நான் சத்தியமா சொல்றேன்...

சுகு : கைலே சில்லறை இல்லே... !

கல் : எனக்கு காசு வேண்டாம். நீங்களே ஓட்டலுக்கு அழைச்சுண்டு போய் ஒரு கப் காபி வாங்கி குடுங்கோ போறும். தலையை கிறு கிறு கிறுன்னு வருது.

சுகு : என்னது, உங்களோட ஓட்டலுக்கு வரணுமா? எனக்கு வேறே வேலையில்லையா? வேறே

COMICS PDF TIMES

எங்கே யாவது போய் கேட்டுப்பார். இதுவே பெரிய நியூசென்ஸா போயிடுத்து.

*(நிகழ்ச்சி முடிகிறது)*

சுகு : ஒரு வாரத்துக்கு முன்னே ஐகோர்ட்டு கிட்டே சொந்த அப்பாவையே பிச்சைக்காரனை விரட்டின மாதிரி விரட்டின பாவி நான்.

கல் : அடடே... அப்படியா? வருத்தப்படாதே. இந்த மெட்ராஸ்லே ரொம்பப் பேர் இப்படித்தான் விரட்டறா. நீ விரட்டினது எனக்கு மறந்து போச்சு. பழசெல்லாம் எனக்கு நன்னா ஞாபகம் இருக்கு. ரெண்டு நாளைக்கு முன்னாலே நடந்ததெல்லாம் மறந்து போயிடறது. சின்ன வயசுலே என்னைப் பார்த்த ஞாபகம் இருக்கா உனக்கு?

சுகு : கொஞ்சம் கொஞ்சம்... சொப்பனத்திலே பார்த்த மாதிரி... போன ஜன்மத்திலே நடந்த மாதிரி.. லேசா ஞாபகத்துக்கு வருது.

கல் : ஒரு நாள் நோட்புக் வாங்கணும்னு நீ காசு கேட்டப்ப, கைலே பணம் இல்லேங்கிற ஆத்திரத்திலே நீ பள்ளிக்கூடம் போக வேண்டாம்னு உன் புஸ்தகம் நோட்புக் எல்லாத்தையும் கிழிச்சு தெருச் சாக்கடையிலே வீசி எறிஞ்சேன். அப்ப அழுதுண்டே ஓடினியே, அது ஞாபகமிருக்கா?

சுகு : இல்லேப்பா. ஆனா ஒரு நாள் நான் ஸ்கூல்லேருந்து திரும்பி வரபோது உங்களை

வழிலே பார்த்துட்டு ரொம்ப பசிக்கிறதுன்னேன். உங்க கைலே காசு இல்லேன்னேள். ஆனா ஓட்டல்காரர்கிட்டே 'அப்புறம் பணம் தரேன்'னு சொல்லிட்டு கோதுமை அல்வா, போண்டா, மசால் தோசை எல்லாம் வாங்கிக் குடுத்துட்டு 'பையா பசி போயிடுத்தா, இன்னும் ஏதாவது வேணுமான்னு' கேட்டேளே, அது நன்னா ஞாபகம் இருக்கு. ஆனா... ஆனா... அப்படிப்பட்ட அப்பா பசிக்கறதுன்னு சொன்னப்ப, அவருக்கு ஒரு காபி கூட வாங்கிக் குடுக்காம துரத்தின நன்றி கெட்டவனா ஆயிட்டேன்னு நினைக்கறப்ப...

கல் : பரவாயில்லை... பரவாயில்லே... சின்ன வயசுலே உனக்குப் பண்ணின கொடுமைகளை யெல்லாம் மறந்துட்டு, என்னிக்கோ ஒரு நாள் டிபன் வாங்கிக் கொடுத்ததை மட்டும் நினைவு வெச்சிண்டிருக்கியே... மனுஷாளோட கெட்ட குணத்தை விட்டு நல்லதை மட்டுமே எடுத்துக்கற உங்கம்மா குணம் உனக்கு அப்படியே வந்திருக்கு... ஆமா உங்கம்மா எப்படிடா இருக்கா? அவளை அடிக்கடிப் போய் பார்ப்பியா?

சுகு : இல்லேப்பா... இத்தனை வருஷத்துலே ஒரு தரமோ ரெண்டு தரமோதான் பார்த்திருப்பேன். அப்ப எங்கிட்டே அம்மா ஒரு வார்த்தை ரெண்டு வார்த்தைக்குமேலே பேசலே.

கல் : (அருகில் வந்து) டேய் பையா... எனக்கு உங்கம்மாவை பார்க்கணும் போலேருக்கு. தனியா போய் அவளைப் பார்க்க வெக்கமா இருக்கு. என்னை நீ நடுக்காவேரி ஆச்ரமத்துக்கு அழைச்சிண்டு போறயா?

சுகு : ...

கல் : ஏன் பதில் பேச மாட்டேங்கறே?

சுகு : நான் உங்களை அங்கே அழைச்சுண்டு போனாலும் உங்களோட அம்மா பேசமாட்டா.

கல் : பரவாயில்லே. அவளை ஒரு தரம் பார்த்தா போறும் எனக்கு.

சுகு : அது மட்டுமில்லே...

கல் : என்ன யோசிக்கறே?

ஜெய : அவன் எதுக்கு யோசிக்கறான்னு எனக்குத் தெரியும். வாஞ்சிநாதனுக்கு அந்த ஆச்ரமத்தை பிடிக்காது... சுவாமிகளை வாய்லே வந்தபடி வெசிண்டிருப்பான். சுகுமாரன் அங்கே போனான்னு தெரிஞ்சா கத்துவான். அதுக்குத்தான் பயப்படறான், இல்லையா சுகுமார்?

சுகு : ...

ஜெய : கல்யாணராமன். கவலைப்படாதீங்கோ... இந்த வாரத்துலேயே நீங்க அந்த ஆச்ரமத்துக்கு போக நான் ஏற்பாடு பண்றேன்.

(திரை)

## காட்சி-15

# நடுக்காவேரி ஆச்ரமம்

*அபிராமி அம்மாள் சுலோகம் சொல்லிக் கொண்டே பூ தொடுத்துக் கொண்டிருக்கிறாள்.*

*(உமாவும் சுரேஷும் வருகிறார்கள்)*

**உமா** : அத்தே... (தலையைத் தூக்கி கண்களை இடுக்கி யார் என்பது போல் பார்க்கிறாள்.) .

**உமா** : நான் தான் அத்தை.

**அபிராமி**: யாரு, கௌரியா?

**உமா** : இல்லே கௌரியோட தங்கை உமா.

**அபிராமி**: அட .டே! உமாமகேஸ்வரியா? உன்னை ரெண்டு மூணு வயசுலே பார்த்தது. இப்ப எப்படி அடையாளம் தெரியும் சொல்லு...

**உமா** : நாலு வருஷத்துக்கு முன்னே வந்திருந்தேனே அத்தை...

**அபிராமி**: அப்படியா? ஞாபகமில்லே...

**உமா** : இவர் என் ஆத்துக்காரர்.

**அபிராமி**: சுவாமிகளை தரிசனம் பண்ணிட்டு போகலாம்னு தம்பதியா வந்தேளா?

**உமா** : உங்களுக்கு நமஸ்காரம் பண்ணிட்டு வரச்சொல்லி என் மாமனார் சொல்லி யனுப்பிச்சார். பண்றோம்... ('பண்ணுங்கள்'

என்று உமா சைகை காட்ட, இருவரும் நமஸ்கரிக்கின்றனர்.)

அபிராமி: அம்பாள் அனுக்கிரகத்துலே க்ஷேமமா இருங்கோ... சுவாமிகள் பூஜைக்கு வர சமயம் - தரிசனம் பண்ணிட்டு பிரசாதம் வாங்கிண்டு என் ரூமுக்கு வாங்கோ... சாப்பிட்டுப் போகலாம்...

(மறுபடியும் பூ தொடுக்கத் தொடங்குகிறாள்)

(உமாவும் சுரேஷும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்கின்றனர்)

உமா: அத்தை, மாமனார் இன்னொரு விஷயமும் சொல்லிட்டு வரச் சொன்னார்.

(என்ன என்று கேட்பது போல் தலையைத் தூக்கிப் பார்க்கிறாள்.)

உமா : அத்திம்பேர் ஊருக்கு வந்திருக்கார்...

அபிராமி: யாரு?

சுரேஷ்: சுகுமாரோட அப்பா.

அபிராமி: என்ன சொல்றேள்? நிஜமாவா?

சுரேஷ்: நிஜம்தான்... இப்ப எங்க வீட்லேதான் இருக்கார்... சௌக்கியமா இருக்கார்.

(அபிராமி அம்மாள் கண்களை மூடி கைகூப்பி விட்டு, திருமாங்கல்யத்தை எடுத்து கண்களில் ஒற்றிக் கொள்கிறாள். கண்களை துடைத்துக் கொள்கிறாள்.)

சுவாமிகளைப் பார்க்கிறப்ப, அத்திம்பேர் உசிரோட திரும்பி வந்திருக்கிற சேதியை சொல்லிடும்மா...

**சுரேஷ்:** கட்டாயம் சொல்றோம்... அப்பா இன்னொண்ணும் கேட்டுண்டு வரச்சொன்னார். சுகுமார் அவரோட அப்பாவை இங்கே அழைச்சுண்டு வரலாமா?

**அபிராமி:** எதுக்கு?

**சுரேஷ்:** உங்களைப் பார்க்கத்தான்.

**அபிராமி:** எதுக்கு?

**உமா :** இதுக்கு என்ன பதில் சொல்றதுன்னே புரியலே அத்தை.

**சுரேஷ்:** உங்களை மெட்ராசுக்கு அழைச்சுண்டு போகத் தான் அப்பாவும் பிள்ளையும் வரா...

**அபிராமி:** அவாவா அவாவா இருக்கிற இடத்திலே இருக்கிறதுதான் நல்லது. நான் அம்பாளுக்கு கைங்கர்யம் பண்ணிண்டு இங்கே நிம்மதியா சந்தோஷமா இருந்துண்டிருக்கேன். எல்லாரும் என்னை இப்படியே இருக்க விட்டுடுங்களேன்; கெஞ்சிக் கேட்டுக்கறேன்...

**சுரேஷ்:** அதெப்படி விடமுடியும்? உங்க குடும்பத்தை நீங்க விட்டாலும் அவா உங்களை விட்டுட முடியுமா? எத்தனை நாள் தனியா இந்த ஆச்ரமத்துலே உக்கார்ந்திருக்கப் போறேள்...?

அபிராமி: என் பிராணன் போற வரைக்கும். ஒருநாள் அது போய்த்தானே ஆகணும்...

உமா : என்ன அத்தே... இப்படியே பேசிண்டிருந்தா...

அபிராமி: இப்படியே பேசிண்டிருந்தா நாழியாயிடும். சுவாமிகள் பூஜைக்கு வந்துடுவார். அதுக்குள்ளே பூத்தொடுத்தாகணும்... (பூத்தொடுக்க ஆரம்பிக்கிறாள்)

(திரை)

## காட்சி-16

## ஜெயராமன் வீடு

ஜெய : இது ரொம்ப அதிசயமாத்தான் இருக்கு. போயே போயிட்டான்னு எல்லாரும் நினைச்சிண்டிருந்த ஆம்படையான் இருபது வருஷம் கழிச்சு திரும்பி வந்திருக்கான்; சேதி கேள்விப்பட்டதும் பறந் தடிச்சு ஓடிவர வேண்டாமோ ஒரு பொம்ம னாட்டி? இந்த அம்மா என்னடான்னா ஆம்படை யான் தன்னை பார்க்கக்கூட வரவேண்டாங் கறாங்களே... இப்படி கூட ஒரு வைராக்கியம் இருக்குமா என்ன? ஆமா, சுவாமிகள் என்ன சொன்னார்...?

உமா : அவர் ஒரு வாரம் மௌன விரதமாம்... நாங்கள் சொன்னதையெல்லாம் கேட்டுட்டு லேசா சிரிச்சார். மேலே கையை உயர்த்தி 'எல்லாம் அம்பாள் சித்தப்படி நடக்கும்'னு சைகை காட்டினார்... அவ்வளவுதான்...

*(உமா உள்ளே போகிறாள்)*

*(கல்யாணராமன் வருகிறார்)*

**கல்யாணம்:** ஜெயராமன் ஸார், நான் வெளியே போயிட்டு வரேன்.

**ஜெய** : எப்ப வருவேள்?

**கல்** : தெரியாது.

**ஜெய** : எங்கே போறேள்?

**கல்** : அதுவும் தெரியலே. நான் இங்கே இருக்கறதனாலே எல்லாருக்கும் வீண் பிரச்னைதான். உங்களுக்கு ரொம்ப சிரமம். அபிராமிக்கு என்னை பார்க்கறதுக்கோ, திரும்பி வந்து என்னோடு குடித்தனம் நடத்தறதுக்கோ பிடிக்கலேன்னு தெரிஞ்சு போயிடுத்து. கட்டின பொண்டாட்டியை திண்டாட விட்டுட்டு ஓடிப்போனவனுக்கு அவமேலே உரிமை கொண்டாட என்ன யோக்கியதை இருக்கு? கிளம்பறேன்.

*(புறப்படுகிறார்)*

**ஜெய** : இதோ பாருங்கோ கல்யாணராமன், நீங்களாகவே எந்த முடிவுக்கும் வரவேண்டாம்... சுகுமாரை வரச் சொல்லியிருக்கேன்... எல்லாருமா கலந்து பேசி மேற்கொண்டு என்ன செய்யறதுன்னு முடிவு பண்ணலாம்...

கல் : ஜெயராமன்... இடிஞ்சு சிதிலமான என் குடும்பக் கோயிலை, திருப்பணி பண்ணி எப்படியாவது கும்பாபிஷேகம் பண்ணிடணும்னு நீங்க பிரயாசைப் படறது எனக்கு புரியறது. அபிராமி, ஆசிரமத்தை விட்டு வரப் போறதில்லை... சுகுமார், மாமனாரை விட்டு வரப்போறதில்லே... ம்... யாருக்கும் வேண்டப்படாதவன் இங்கே எதுக்கு இருக்கிறது? வந்த சுவடே தெரியாம நான் போயிடறதுதான் எல்லாருக்கும் நல்லது... சுரேஷ் வரேம்ப்பா...

(சுகுமாரும் கெளரியும் வருகிறார்கள்)

ஜெய : சரியான சமயத்திலே ரெண்டு பேரும் வந்தேள்! சுகுமார், உங்கப்பா வீட்டை விட்டு புறப் பட்டுண்டிருக்கார்... நீதான் அவரை இருக்கச் சொல்லணும்... பிள்ளை சொன்னாத்தான் கேப்பார் போலேருக்கு.

கல் : என் புள்ளை! அப்பாவை எங்கே இருக்கச் சொல்றதுன்னு புரியாம திண்டாடறான் பாவம்!

சுகு : ஏம்ப்பா இப்படி நினைக்கிறேள்? நீங்க என்னோடத்தான் இருந்தாகணும். எல்லாரும் நடந்ததையெல்லாம் மறந்துட்டு மறுபடியும் ஒண்ணா இருக்கிறதுக்கு முயற்சி பண்ணிண் டிருக்கேன்.

ஜெய : ஐயோ பாவம். உன்னைப் பார்த்தா பரிதாபமா இருக்கு. எப்படியாவது உன் மாமனார் புத்தியை

மாத்திடலாம்னு நினைக்கறே... நாய் வாலை நிமிர்த்தலாம்னு நினைக்கறே.

சுகு : நான் அப்படி நினைக்கலே... அப்பா திரும்பி வந்திருக்கிற விஷயத்தை மாமா கிட்டே சமயம் பார்த்துச் சொல்லி அவரோட மனசை மாத்த முடியும்னு நம்பறேன்...

ஜெய : இதோ பாருப்பா... இந்த வீண் முயற்சியிலே இறங்கிறதை விட்டுடு. அம்மா வரமாட்டேன்னு சொன்னாலும் அப்பாவையாவது உங்கூட வெச்சுண்டு காப்பாத்து. பாவம், அவரை நடுத்தெருவுலே நிக்க வெச்சுடாதே.

சுகு : ஒரு நாளும் விடமாட்டேன். மாமா, இன்னும் ரெண்டு மூணு நாள் அப்பா இங்கே இருக்கறதுலே உங்களுக்கு அப்ஜெக்ஷன் இல்லியே...

ஜெய : ரெண்டு மூணு நாள் என்ன? ஆயுள் பூரா இங்கேயே இருக்கட்டுமே... நீ உன் மாமனார் பேச்சைக் கேட்டுண்டு அப்பாவைப் பட்டினிப்போட்டு பாவத்தைச் சேர்த்துக்கோ... ஒரு அநாதை ஜீவனுக்கு சோறு போட்ட புண்ணியம் எனக்குக் கிடைக்கட்டும், போயிட்டு வா...

கௌரி : மாமா இவ்வளவு பச்சையா சொல்றார், வெக்கமா இல்லே உங்களுக்கு? வாயை மூடிண்டிருக் கேளே... எனக்கு மானம் போறது. பிள்ளையும் மாட்டுப்பொண்ணும் உயிரோட இருக்கிறப்ப,

அப்பா அம்மாவை அநாதையா யார் வீட்லேயோ சோறு தின்ன விடறது மகா பாவம். இதோ பாருங்கோ, உங்களுக்கு உங்க மாமனார் ஒசத்தின்னா நீங்க அவரோடேயே இருங்கோ. நான் நடுக்காவேரி ஆச்ரமத்துக்குப் போய் அத்தை கால்லே விழுந்து கெஞ்சிக் கூத்தாடி இங்கே அழைச்சிண்டு வந்து வேலை செஞ்சு சம்பாதிச்சாவது என் மாமனார் மாமியாரை நான் காப்பாத்தறேன்.

ஜெய : நீ வேலை செய்வானேன் பாவம்! உன் மாமனார் பணத்தை உங்கப்பா கொள்ளையடிச்சு வெச்சிருக்காரே. முதல்லே அவர்கிட்டேயிருந்து அதை உன் ஆம்படையானை வாங்கிக் குடுக்கச் சொல்லு...

சுகு : என்ன மாமா சொல்றேள்?

ஜெய : உங்க அப்பாவையே கேளு... பாவம்! அப்ப உனக்கு விவரம் தெரியாத வயசு. உங்கப்பா சேர்த்து வெச்சிருந்த பணம் போறாதுன்னு நிலத்தையும் விக்கச் சொல்லி பிஸினஸ் பண்றேன் பேர்வழின்னு அந்த ஐம்பதினாயிரம் ரூபாயை அமுக்கி வெச்சிண்டு, நஷ்டமாயிடுத்துன்னு கையை விரிச்சுட்டார் உங்க மாமனார். பணத்தைக் கேட்டதுக்கு உங்கப்பாவை வீட்டை விட்டே அடிச்சு விரட்டினார். இப்ப அந்த பணத்தோட மதிப்பு நாலு லட்ச ரூபா.

சுகு : அப்பா, இந்த விஷயமே எனக்கு இதுவரைக்கும் தெரியாது... மாமா இவ்வளவு மோசக்காரரா?

கல் : உன் மாமா, வாங்கின பணத்தைத் திருப்பிக் கொடுக்காத மோசக்காரன் மட்டுமில்லே. பணமே வாங்கலேன்னு பொய் சொன்ன அயோக்யன்... எனக்காக பரிஞ்சு நீ அவர்கிட்டே பேசவேண்டாம். நீ போய் உங்க அம்மாவைக் கூப்பிட்டுப் பார். அவ வந்தாலும் வராட்டாலும் நான் உன்னோடேயும் கௌரியோடேயும் இருக்கேன். ஜெயராமன் சொன்ன மாதிரி அதுக்கு ஏற்பாடு பண்ணு, போ. இன்னும் ஒரு வாரம்தான் இந்த வீட்டிலே இருப்பேன். அதுக்குள்ளே உன் முடிவைச் சொல்லிடு. இல்லாப்போனா உனக்கு அப்பன் ஒருத்தன் இருக்காங்கறதையே மறந்திடு.

## காட்சி-17
## வாஞ்சிநாதன் வீடு

(வாஞ்சி நடக்கிறார். சுகுமார் ஆபீசிலிருந்து வருகிறான். தயங்குகிறான்.)

வாஞ்சி: சுகுமாரா...

சுகு : (வந்து) என்ன மாமா?

வாஞ்சி: ஒண்ணுமில்லே, போ... (போகிறான்)

வாஞ்சி: சுகுமாரா...

சுகு : என்ன மாமா?

வாஞ்சி : சுகுமார், நம்ப முடியாத ஒரு சேதியை உனக்கு நான் இப்ப சொல்லப் போறேன்...

சுகு : என்ன மாமா?

வாஞ்சி: உலகத்தை விட்டே போயிட்டான்னு நினைச்சிண்டிருந்த உங்கப்பா இப்ப மெட்ராஸ்லே சுத்திண்டிருக்கார்.

சுகு : தெரியும் மாமா.

வாஞ்சி: எப்படித் தெரியும்?

சுகு : சம்பந்தி ஜெயராமன் சொன்னார்.

வாஞ்சி : அவனுக்கு யார் சொன்னா...?

சுகு : அப்பா ஜெயராமன் வீட்டுக்குத்தான் வந்திருக்கார்.

வாஞ்சி: என்னது, இங்கே வராம அவன் வீட்டுக்கு எதுக்குப்போய் தங்கியிருக்கார் உங்கப்பா? இது ஜெயராமனோட சதிவேலையாயிருக்கும். இவரைப் பிடிச்சு வெச்சுண்டு ஊரெல்லாம் தம்பட்டம் அடிச்சு, என்னை அவமானப் படுத்தலாம்னு பார்க்கிறானா? போய் உங்க அப்பாவை இங்கே கையோட அழைச்சிண்டு வா.

(தயங்குகிறான்)

வாஞ்சி: சொன்னா கேக்கமாட்டியா?

சுகு : இங்கே வரமாட்டேன்னு அப்பாவே எங்கிட்டே சொல்லிட்டார்.

வாஞ்சி: என்ன, உங்கப்பாவை நீ பார்த்தியா?

சுகு : பார்த்தேன், பேசினேன்.

வாஞ்சி: அதை ஏன் அப்பவே எங்கிட்டே சொல்லலே? நீயும் ஜெயராமன் பக்கம் சேர்ந்துண்டு எனக்கு எதிரா சதி பண்றியா? உங்கப்பா வந்திருக்கிறது கௌரிக்கும் தெரியுமா? (கௌரி வருகிறாள்)

கௌரி: நானும் இவரும் சேர்ந்துதான் தாம்பரத்துக்குப் போய் அவரைப் பார்த்துட்டு வந்தோம்.

வாஞ்சி: அதானே பார்த்தேன்! எனக்கு எதிரா நடக்கிற சதிலே நீ சேராம இருப்பியா... எனக்கு முதல் எதிரியே நீதானே...?

கௌரி: பிள்ளை அப்பாவை பார்த்துட்டு வந்தா அது சதியா?

வாஞ்சி: எனக்குத் தெரியாம என் விரோதி வீட்டுக்குப் போனா, அது சதிமட்டுமல்ல, துரோகம், பச்சை துரோகம்...!

சுகு : மாமா, அப்பா வந்துட்ட சேதியை உங்ககிட்டே உடனேயே சொல்லாதது தப்புதான்... ஆனா திடீர்னு அப்பா கிடைச்ச சந்தோஷச் செய்தியை உங்ககிட்டே அவசரப்பட்டு சொல்லி காரியத்தைக் கெடுத்துடக்கூடாதேன்னுதான் பேசாம இருந்தேன். அப்பா அம்மாவை இங்கே அழைச்சுண்டு வந்துடணுங்கற நல்ல எண்ணத்தைத் தவிர என் மனசுல வேற எதுவும் இல்லே மாமா.

வாஞ்சி: உங்கப்பாவும் அம்மாவும் எனக்குத் தெரியாம, என்கிட்டே சொல்லாம, வீட்டை விட்டு ஓடிப்போனவா. அதுக்காக அவா எங்கிட்டே மன்னிப்புக் கேட்டாத்தான் அவாளை நான் இந்த வீட்டுக்குள்ளே சேர்ப்பேன்.

சுகு : யார், யார்கிட்டே மன்னிப்புக் கேக்கறது? மாமா, எனக்கு நடந்தது எல்லாம் தெரியும். நீங்க செஞ்சதுக்கெல்லாம் நீங்கதான் அவாகிட்டே மன்னிப்பு கேக்கணும்...

(கௌரியின் முகத்தில் மகிழ்ச்சி)

வாஞ்சி: நான் அவாகிட்டே மன்னிப்பு கேக்கணுமா? என்ன திமிர்ரா உனக்கு! பெத்த பிள்ளையை வெச்சுக் காப்பாத்த முடியாத அந்த ஓடுகாலி தாயார் கிட்டேயும் உதவாக்கரை அப்பன் கிட்டேயும் நான் மன்னிப்புக் கேக்கணும்னு சொல்ல நீ யார்ரா?

சுகு : அவா பெத்தெடுத்த பிள்ளை... மாமா இத்தனை வருஷமா என்னை எத்தனையோ கேவலமா பேசியிருக்கேள். புழுவை விட மோசமா நடத்தியிருக்கேள். என்னை வளர்த்த வர்ங்கிறதுக் காக அத்தனையும் பொறுத்துண்டேன்... ஆனா என்னைப் பெத்தவாளை என் எதிர்லேயே கண்டபடி பேசி என் மனசு புண்படற மாதிரி தயவு செஞ்சு பேசாதீங்கோ. என்னாலே தாங்க முடியலே.

வாஞ்சி: தாங்க முடியலேன்னா அவாமாதிரியே நீயும் வீட்டை விட்டுக் கிளம்பு. உன் பொண்டாட்டி

யோட ரொம்ப நாள் ஆசையாச்சே இது! தனியா போய் உன்னை அருமையா பெத்து ரொம்ப திவ்யமா வளர்த்தாளே, அந்த அப்பா அம்மாவை வெச்சிண்டு தனியா குடித்தனம் நடத்து, போ...

**கௌரி:** மாப்பிள்ளையை வெறுங்கையோட துரத்திடலாம்னு நினைக்கிறேளா?

**வாஞ்சி:** வெறுங்கையோட வெளியே போவானேன்? ஒரு கைலே பொண்டாட்டியையும், இன்னொரு கைலே பொண்ணையும் பிடிச்சுண்டு போடாப்பா...

**கௌரி:** அதைக் கேளுங்களேன்னா... இன்னும் என்ன தாட்சண்யம்... கழுத்தைப் பிடிச்சு தள்ளினப்புறம் எதுக்கு பயப்படறேள்...?

**வாஞ்சி:** உன் பொண்டாட்டிக்கு என்ன வேணுமாம்? சீதனமா?

**சுகு :** இல்லே... எங்கப்பாகிட்டே நீங்க வாங்கிண்ட ஐம்பதினாயிரம் ரூபா!

**வாஞ்சி:** (அதிர்ச்சியடைந்து) உங்கப்பாகிட்டே பணம் வாங்கிண்டேனா? எப்போ? எழுதிக் குடுத்தேனா? அதுக்கு உங்கப்பா பத்திரம் வெச்சிருக்காரா? உங்கிட்டேயாவது அத்தாட்சியிருக்கா?

**சுகு :** இல்லே... ஒண்ணுமே எழுதி வாங்கிக்காமத்தான் அப்பா பணம் குடுத்தாராம்.

**வாஞ்சி:** அத்தனையும் பொய், கட்டுக்கதை. உன் அப்பனும் ஜெயராமனும் சேர்ந்து எனக்கு எதிரா

உன்னைக் கிளப்பி விட்டிருக்கா. உன் மூலமா என் மேலே பழி தீர்த்துக்கறா!

சுகு : மாமா! எனக்கு அந்தப் பணம் வேண்டாம். எங்கப்பா கிட்டே பைசாகூட பணம் வாங்கலேன்னு உங்க மனசாட்சியைத் தொட்டு உங்களாலே சொல்ல முடியுமா?

வாஞ்சி: (மார்பைத் தொட்டு) சத்தியமா வாங்கலே, போதுமா... அதிகப்பிரசங்கி. உன்கூட எனக்கு என்னடா பேச்சு? போடா... (வெளியே போகிறார்)

சுகு : கெளரி உங்கப்பாவுக்கு அணு அளவாவது மனசாட்சி இருக்கும், எங்கிட்டே பொய் சொல்ல மாட்டார்னு நிச்சயமா நினைச்சேன். என் நம்பிக்கையிலே மண் விழுந்துடுத்து.

கெளரி: அதான் நான் தான் முதல்லேருந்து சொல்லிண்டிருக்கேனே. எங்கப்பா குணம் எனக்குத் தெரியாதா என்ன?

சுகு : நான் இப்பத்தான் தெரிஞ்சுண்டேன். இருந்தாலும் அவரை என்னாலே வெறுக்க முடியலையே... அவர் 'போடா'ன்னு சொன்னாலும் அவரைத் தனியா விட்டுட்டு என்னாலே போயிட முடியாது. கெளரி... உனக்கு இது புரியாது. எங்களுக்குள்ளே இருக்கிற உறவு புரியவே புரியாது. தன் ஒரே பிள்ளை கணபதி தன்னை விட்டுட்டு வெளிநாடு போயிட்டா னேன்னு அவர் உள்ளுக்குள்ளே எவ்வளவு

ஏங்கிப் போறார்னு எனக்குத்தான் தெரியும்... அவன் இடத்திலே என்னை வெச்சு, என் மேலே பாசத்தைக் கொட்டி, திட்டித்தீர்த்து அந்த நஷ்டத்தை ஈடுகட்டிண்டிருக்கார் அவர். மேலும் என்ன பேசினாலும் ரெண்டு பேராலும் ஒருத்தரையொருத்தர் பிரிஞ்சு இருக்க முடியாது.

**கௌரி:** சே! என்ன பைத்தியக்கார செண்டிமெண்ட் இது! இப்படியொரு கோழையை நான் பார்த்ததே யில்லை. இந்த ஜன்மம் பூரா என்னோட வாழ்ந்தாலும் உங்களாலே என் மனசைப் புரிஞ்சுக்க முடியாது... நீங்க என்ன வேணு மானாலும் பண்ணிக்கோங்கோ போங்கோ...

## காட்சி-18

*(அடையாளம் தெரியாதபடி உடலில் கட்டுகள் போட்டுக் கொண்டு சுந்தா-நந்தா நின்று கொண்டிருக்க, பிரசாத் வருகிறான்.)*

**நன்தா :** நீங்க பிரசாத் தானே?

**பிரசாத்:** ஆமா, நீங்க யாரு தெரியலையே...

**சுந்தா :** நல்ல வேளை, எங்களை அடையாளம் தெரியாமல் இருக்கிறது ஒரு விதத்துலே நல்லதுதான். தெரிஞ்சா கட்சிக்காரங்க அடிபட்ட இடத்திலேயே மறுபடியும் அடிப்பாங்க...

**பிரசாத்:** எங்கேயோ கேட்ட குரல் மாதிரியிருக்கே... சுந்தா - நந்தாவா?

**நந்தா :** ஆமா, வெளிலே சொல்லா தீங்க...

பிரசாத்: ஏன், என்னாச்சு?

நந்தா : தேர்தல் பிரசாரக் கூட்டங்கள்லே கட்சி சார்பில்லாம கலந்துகிட்டோம். ஒரு கட்சிக்காரங்க எதிர்க்கட்சிக்காரங்களைக் கேலி பண்ணி ஜோக் சொல்லச் சொன்னாங்க. நாங்களும் மானாவாரியா ஜோக்குங்களை வாரி வீசினோம்.

சுந்தா : கூட்டத்திலேருந்து எங்க மேலே மானா வாரியா கல்லுங்களை வீசினாங்க... கூட்டம் முடிஞ்சு போறச்சே தொண்டர்கள் உடம்பு பூரா ஒத்தடம் குடுத்து அனுப்பிச்சுட்டாங்க...

நந்தா : வயத்தெரிச்சல் என்னான்னா, ரெண்டு கட்சிக் காரங்களும் அடிச்சாங்க... இனிமே உங்கப்பராணே எந்த மேடைலேருந்தும் ஜோக் சொல்றதுல்லேன்னு சபதம் எடுத்துகிட்டோம்.

பிரசாத்: ஆமா, நிறைய ஜோக் ஸ்டாக் வெச்சிருக்கீங் களே... அத்தனையும் வேஸ்டா ஆயிடுமே.

நந்தா : 'இவ்விடத்தில் ஜோக்குகளை விலைக்கு கிடைக்கும்'னு போர்டு போட்டுகிட்டு வீட்டுலேயே ஒக்காந்துடப் போறோம்.

சுந்தா : காமடி டிராமா எழுதுறவங்களுக்காக வீடு பூரா ஜோக் தோரணம் கட்டி வைக்கப் போகிறோம்.

நந்தா : டஜன் கணக்குலே தோரணம் வாங்கறவங்களுக்கு 25% விசேஷ தள்ளுபடி உண்டு. பழைய ஜோக்குகள் கொஞ்சம் காஸ்ட்லியா இருக்கும்!

உங்களுக்கு தெரிஞ்ச ரைட்டர்ஸ் இருந்தா சொல்லுங்க.

*பிரசாத்:* நானே காமெடி நாடகம் எழுதலாம்னு இருக்கேன். உங்க அட்ரஸைக் கொடு.

*(திரை)*

## காட்சி-19
## நடுக்காவேரி ஆச்ரமம்

*(சுகுமார், கௌரி, சுஜாதா, சுரேஷ், உமா, கல்யாணராமன் முதலியோர்)*

*ஆச்ரம பையன்:* நீங்க பூத்தொடுக்கிற அபிராமி மாமியை பாக்கத்தான் காத்திண்டிருக்கேளா?

*சுகு* : ஆமா...

*பையன்:* மாமி திருவையாறு கோயிலுக்குப் போயிருக்கா... வந்துடுவா... கொஞ்சம் இருங்கோ... நீங்க அந்த மாமிக்கு என்ன வேணும்?

*சுகு* : அந்த மாமி என்னோட அம்மா... ஆமா, சுவாமிகள் எப்போ வருவார்...?

*பையன்:* வெறுமே தரிசனம் பண்ணணுமா...? ஏதாவது பேசணுமா...? ஏன் கேக்கறேன்னா, தனியா பேணும்னா நீங்க மொதல்லே மேனேஜரைப் பார்க்கணும்... யார் என்னன்னு சொல்லி அவர்கிட்டே பர்மிஷன் வாங்கணும்.

*சுகு* : மானேஜரைப் பார்த்து எல்லாம் சொல்லிட்டோம். இங்கே வெயிட் பண்ணச் சொன்னார்.

COMICS PDF TIMES

**பையன்:** அப்படின்னா எங்கிட்டே ஏன் கேக்கறேள்...? காத்திண்டிருங்கோ, சுவாமிகள் வருவார்...

(போகிறான்)

(சிவ சிவ சங்கர, கைலாச சங்கர, காலடி சங்கர என்ற கோஷம் கேட்கிறது)

**பையன்:** தள்ளி நில்லுங்கோ, சுவாமிகள் வரார்.

(சுவாமிகள் வருகிறார். 'சம்போ மகாதேவா' என்று கூறிவிட்டு மேடையில் அமர்கிறார்.)

**பையன்:** இவாதான் மெட்ராஸ்லேருந்து வந்திருக்கிற பார்ட்டி. மானேஜர் சொல்லச் சொன்னார். இவர் தான் பூதொடுக்கிற அபிராமி மாமியோட பிள்ளை...

(ஆசி வழங்குகிறார்)

**சுவாமிகள்:** ஏற்கெனவே இங்கே ரெண்டு தரம் வந்திருக்கியேப்பா...

சுகு : ஆமா...

**பையன்:** சுவாமிகள் மடி. யாரும் நமஸ்காரம் பண்ண வேண்டாம்... நீங்க கேக்க வேண்டியதை கேட்டுக் கோங்கோ!

**சுவாமிகள்:** அம்மாவை அழைச்சுண்டு போக வந்திருக்கியாப்பா?

சுகு : ஆமாம்.

**பையன்:** மாமி இங்கே இல்லை. திருவையாறு வரைக்கும் போயிருக்கா. எங்கிட்டே சொல்லிட்டுத்தான் போனா.

(பேசாமல் இரு என்பது போல் சுவாமிகள் அவனைப் பார்க்கிறார்)

**பையன்:** ஏன் நின்னுண்டிருக்கேள்? கேக்க வேண்டியதை கேளுங்கோ.

**சுவாமிகள்:** நீ அந்த கிணத்துக்கிட்டே போய் நில்லு

(போகிறான்)

**சுகு** : இவர்தான் எங்கப்பா...

**சுவாமிகள்:** மானேஜர் சொன்னார்... (கல்யாணராமனைப் பார்த்து) நீங்க ஊருக்கு வந்து மூணு வாரம் ஆயிருக்குமா?

**கல்** : ஆமா.

**சுகு** : இருபது வருஷத்துக்கு முன்னே புத்தி சுவாதீனமில்லாம வீட்டை விட்டுப் போயிட்டு...

**சுவாமிகள்:** (கையை போதும் என்பது போல் காட்டி) எனக்கு எல்லாம் தெரியும்பா...

**சுகு** : அம்மாவை அழைச்சுண்டு போய், ரெண்டு பேரையும் என்கூட வெச்சுக்கணும்னு ஆசைப் படறேன்.

**சுவாமிகள்:** ரொம்ப சந்தோஷம்.

சுகு : ஆனா அம்மா மறுபடியும் குடும்ப வாழ்க்கைக்கு வரமாட்டேன்னு என் மச்சினிகிட்டேயும், ஷட்டகர்கிட்டேயும் சொல்லிட்டாளாம்.

சுவாமிகள்: அம்மா உங்கூட வருவா, கவலைப்படாதே!

கல் : நான் என் சம்சாரத்தை ரொம்ப கொடுமைப் படுத்திட்டேன்... தனியா தவிக்க விட்டுட்டுப் போயிட்டேன். இந்தப் பாவிக்கு மன்னிப்பு உண்டா?

சுவாமிகள்: நாம் மனசு அறிஞ்சு விருப்பு வெறுப்போட செய்யற தப்புதான் பாவம். புத்தி பேதலிச்சு போய் என்ன பண்றோம்னு தெரியாம செய்ற காரியத்திலே பாவமே ஒட்டாது...

கல் : அப்படின்னா எனக்கு மன்னிப்பு உண்டுங்கறேளா?

சுவாமிகள்: பாவமே பண்ணலேங்கிறப்ப மன்னிப்புங்கிற பேச்சுக்கே இடமில்லையே?

கல் : என் மிச்ச காலத்திலேயாவது, அபிராமிகிட்டே அன்பா, ஆதரவாயிருந்து கண்ணை மூடணும்னு தான் திரும்பி வந்தேன்.

சுவாமிகள்: இந்த அன்பு எப்பவாவது ஒரு நாள் கிடைக்கும்ங்கிற நம்பிக்கைலேதான் இந்த அம்மா இத்தனை வருஷம் இந்த ஆச்ரமத்துலே தங்கியிருந்தா. அந்த உத்தமியோட தபஸ் சக்திதான் உங்களை திருப்பி அழைச்சிண்டு வந்திருக்கு. எல்லாம் அம்பாள் கருணை...

*(கண்களை மூடி கைகளை உயர்த்திக் காட்டுகிறார்)*

*(அபிராமி வருகிறாள்)*

**பையன்:** மாமி, நமஸ்காரம் பண்ணிடாதீங்கோ!

**சுவாமிகள்:** இவருக்கு நமஸ்கரம் பண்ணும்மா *(கல்யாணராமனைக் காட்டுகிறார்)*

*(அபிராமி கல்யாணராமனுக்கு நமஸ்காரம் பண்ணும் போது அவர் முகத்தைத் திருப்பிக் கொள்கிறார்.)*

**கல்** : நான் அபிராமியைப் பார்த்துட்டுப் போகணும்னு தான் வந்தேன். அவளுக்கு இங்கே நிம்மதியும் சாந்தியும் கிடைக்கிறதுன்னா இங்கேயே இருக்கட்டும். அதைக் கெடுக்க நான் விரும்பலே.

**சுவாமிகள்:** இல்லேப்பா... ஒரு சுமங்கலிக்கு புருஷனோட இருக்கிறதுதான் பெருமை... தாயார், பிள்ளை யோட இருக்கிறதுதான் நியாயம். தெய்வத்துக்கு சமமா சொல்லப்பட்டிருக்கிற அப்பா அம்மாவை வெச்சுக் காப்பாத்தறதுதான் பிள்ளையோட தர்மம்.

**சுகு** : சுவாமி, இப்ப எனக்கு ஒரு தர்மசங்கடமான நிலைமை ஏற்பட்டிருக்கு..

**சுவாமிகள்:** சொல்லுப்பா... சுகுமார் *(கௌரியின் காதில் ஏதோ சொல்ல அவள் மற்றவர்களை அழைத்துச் சென்று விடுகிறாள்.)*

**பையன்:** மாமி, நீங்களும் அங்கே நின்னுண்டிருக்காதீங்கோ, போயிடுங்கோ.

**சுவாமிகள்:** நீயும் போப்பா... (போகிறான்)

சுகு : எங்க மாமாவுக்கும் எங்கப்பாவுக்கும் ஆகவே ஆகாது. அவாளுக்குள்ளே பண விவகாரத்துலே பழைய மனஸ்தாபம் ஒண்ணு இருக்கு...

**சுவாமிகள்:** எல்லாம் எனக்குத் தெரியும்...

சுகு : தன் சொந்தப் பிள்ளை மாதிரி என்னை வளர்த்த மாமாவை விட்டுவிட்டு தனியா போகணுமேன்னு மனசு ரொம்ப கஷ்டப்படறது... ஒரு பக்கம் வளர்த்தவர் மேலே பாசம், இன்னொரு பக்கம் பெத்தவா மேலே பாசம்னு, என்ன செய்யறதுன்னே புரியாமே தவிச்சுண்டிருக்கேன்... நீங்கதான் ஒரு வழி சொல்லணும்.

**சுவாமிகள்:** உன் குடும்ப விவகாரத்துலே தலையிட்டு இப்படிப் பண்ணு அப்படிப் பண்ணுன்னு சொல்றதுக்கு நான் ஒரு சம்சாரி இல்லே, சந்நியாசி. இருந்தாலும் பொதுவான தர்ம நியாயத்தை எனக்குத் தெரிஞ்சவரைக்கும் சொல்றேன். அவர் எப்படிப்பட்டவராயிருந்தாலும் நமக்கு உதவி செஞ்சவாளை நாம் மறக்கவே கூடாது. முடிஞ்சா அவருக்கு பிரதி உபகாரம் பண்ணணும். மனுஷனுக்கு இருக்க வேண்டிய பண்புகளில் இது ரொம்பவும் ஒசந்தது. உப்பிட்டவரை, நம் உயிர் இருக்கிறவரைக்கும் நினைக்கணும்னு சொல்லியிருக்கு. நமக்கு

*உயிர்குடுத்த அப்பா அம்மாவை அவா உயிர் இருக்கிற வரைக்கும் காப்பாத்தணும்னு சொல்லியிருக்கு... நமக்கு உயிர் குடுத்த பெத்தவாளோட இருந்துண்டே வளர்த்தவர் கிட்டே நன்றியோட நடந்துக்கோ... அவருக்கு உன்னாலான உபகாரத்தைச் செய்... அம்மாவை ஊருக்கு அழைச்சிண்டு போ...*

*(எழுந்து போகிறார்)*

*(சிவ சிவ சங்கர, சதாசிவசங்கர கோஷம் கேட்கிறது)*

*(திரை)*

## காட்சி-20
## வாஞ்சிநாதன் வீடு

**வாஞ்சி:** *எதுக்கு எல்லாருமா நடுக்காவேரி சாமியார்கிட்டே போயிட்டு வந்தேள்?*

**சுகு** : *அம்மாவை அங்கேருந்து அழைச்சுண்டு வரத்துக்காக...*

**வாஞ்சி:** *உங்க அம்மாவை அழைச்சிண்டு வர ஒரு பஸ் நிறைய இத்தனை பெரிய கோஷ்டியா போகணுமா... நிஜத்தைச் சொல்லு. எதுக்கு அங்கே போனேள்?*

**சுகு** : *நிஜம்மா அம்மாவை அழைச்சிண்டு வரத்தான் போனோம். அப்பாவும் சுவாமிகளை பார்க்கணும்னு சொன்னார்.*

வாஞ்சி: எதுக்கு? என்னைப்பத்தி கோள்மூட்றதுக்குத் தானே...

சுகு : இல்லை. உங்களைப் பத்தி அவர் வாயே திறக்கலே.

வாஞ்சி: அது சரி. எல்லாரையும் போகச் சொல்லிட்டு அந்த சாமியாரோட தனியா நீ என்ன பேசினே?

சுகு : என் மனசுலேருந்த சங்கடத்தை அவர்கிட்டே சொன்னேன்.

வாஞ்சி: பொய் சொல்றே! என்னைப் பத்தி கேவலமா அவர்கிட்டே பேசியிருக்கே. தேரழுந்தூரான் சொல்லிக் குடுத்ததை நீ அப்படியே ஒப்பிச்சிருக்கே... எனக்குத் தகவல் வந்திருக்கு...

சுகு : அப்படியெல்லாம் ஒண்ணுமில்லே...

வாஞ்சி: எல்லாம் எனக்குத் தெரியும்டா. தின்னசோத்துக்கு துரோகம் நினைக்கறே நீ... அந்த சாமியார் என்னை என்னடா பண்ணிட முடியும்...? பிறத்தியார் குடும்ப விவகாரங்கள்லே தலையிடறதே அவர் வேலை. என்ன சந்நியாசி இவர்! வீட்டை விட்டு ஓடிவந்தவளை, 'உங்க அண்ணாகிட்டவே திரும்பிப்போ'ன்னு அட்வைஸ் பண்ணித் துரத்தாமே இத்தனை வருஷம் ஆச்ரமத்துலே இருக்க அவளுக்கு எப்படி எடம் கொடுத்தார்? நான் அப்பவே அவர் மேலே கேஸ் போடறதா இருந்தேன். போனா போறதுன்னு விட்டேன்... உன் மனசையும் கெடுத்து எங்கிட்டேயிருந்து பிரிச்சுடப் போறா

ரேன்னுதான் உன்னை அங்கே போக வேண்டான்னு சொல்லிண்டிருந்தேன். இப்ப எங்கிட்ட சொல்லாம திருட்டுத்தனமா அங்கே போய் அந்தரங்கமா அவரோட பேசிட்டு வந்திருக்கியா...? எனக்கு விரோதமா என்னெல்லாம் சொல்லிக் குடுத்தார் அந்த நாட்டாண்மை சாமியார்?

சுகு : எனக்கு அவர் நல்லதுதான் சொன்னார் மாமா. சத்தியமா சொல்றேன். உங்ககிட்டே நன்றியோட இருக்கச் சொன்னார். உங்களுக்கு உபகாரமா இருக்கச் சொன்னார்.

வாஞ்சி : உன் நன்றியையும் உபகாரத்தையும் இப்ப எவன் கேட்டான்? என்னைப் பார்த்துக்க எனக்குத் தெரியும்... நீ எடுப்பார் கை பிள்ளையாயிட்டே. உன் குணம் கெட்டுப்போயிடுத்து. நீ வீட்டை விட்டுப் புறப்பட்டுப் போறதுக்கான ஏற்பாடு களைப் பண்ணு...

சுகு : உங்களுக்கு என்மேலே கோவம் இருந்தாலும் உங்களைத் தனியா விட்டுட்டுப் போக எனக்கு மனசாகலே... நான் பக்கத்துத் தெருவிலே தான் வீடு பார்க்கப் போறேன். உங்களுக்கு அங்கேருந்து சாப்பாடு கொண்டு வந்து குடுக்கறேன்.

வாஞ்சி: சோத்துக்கு யார் கையோ, எதிர்ப்பார்த்துண்டு ஒக்கார்ந்திருக்கிற பரதேசிப்பயன்னு நினைச்சியா என்னை? உங்க யாரையும் நம்பி நான் பொறக்கலே போங்கடா...

சுகு : உங்களை இங்கே தனியா விட்டுட்டு நான் அங்கே நிம்மதியா இருக்க முடியாது மாமா.

வாஞ்சி: நீ நினைக்கிற மாதிரி நான் இங்கே தனியா இருக்கப் போறதில்லே...

சுகு : யாரோட இருக்கப் போறேள்...?

வாஞ்சி: மஸ்கெட்லேருந்து என் பிள்ளை கணபதி வரப்போறான். இத்தனை வருஷம் கழிச்சு லெட்டர் போட்டிருக்கான். அங்கே அவன் குபேரனா கொழிச்சிண்டிருக்கானாம். இங்கே ஒரு மாசம் இருந்துட்டு என்னையும் கூடவே அழைச்சுண்டு போறேன்னு எழுதியிருக்கான். இன்னிக்கோ நாளைக்கோ நிச்சயம் வந்துடுவான்.

சுகு : அப்படியா, ரொம்ப சந்தோஷம் மாமா.

வாஞ்சி: ஊரை விட்டு ஒழியறானேன்னு சந்தோஷப் படறயா? உங்கப்பா அம்மா கிடைச் சுட்டாளேங்கிற திமிர்டா உனக்கு. நீ ஏன் பேச மாட்டே... தெரு நாய்க்கு சோறுபோட்டு வளர்த்திருந்தாலாவது இன்னும் கொஞ்சம் நன்னி விசுவாசத்தோட இருந்திருக்கும்டா... சே... (சுகுமார் வாயடைத்துப் போகிறான். கௌரி வருகிறாள்)

கௌரி: அப்பா, இவரை நீங்க கோவத்துலே என்னெல்லாமோ பேசியிருக்கேள்... ஆனா இப்படியொரு வார்த்தை இதுவரைக்கும் சொன்னதில்லே... இவருக்குப் போய் நன்னி

விசுவாசம் இல்லேங்கிறேளே... இது உங்களுக்கு அடுக்குமா? பத்து வருஷமா 'இருக்கேளா, செத்தேளா'ன்னு திரும்பிப் பார்க்காத பிள்ளை, இன்னிக்கு பணத்தோட வந்து அழைச்சுண்டு போகப் போறாங்கற திமிர்லே, உங்களுக்கு நாயா உழைச்சவரை, நாக்குலே நரம்பில்லாம நாய்னு திட்டறேளா? சே... நீங்கதான் நன்னி கெட்டவர். மனுஷத்தன்மையே கொஞ்சங்கூட இல்லாத பணப்பிசாசு. என் மாமனார் உங்களுக்கு குடுத்த பணத்தைப் பத்தி இவருக்கு தெரிஞ்சுப் போச்சேங்கறத்துக்காக இவர் மேலே விஷத்தைக் கக்கறேள்... (கணவனிடம்) வீடு பார்க்கிற வரைக்கும் இங்கே இருக்க வேண்டாம். ஜெயராம மாமா அவர் வீட்லே வந்து இருங்கோன்னு சொல்லியிருக்கார். வாங்கோ போகலாம்.

**வாஞ்சி:** இப்பவே போங்கோ... குடும்பத்தைப் பிரிச்சு, என்னை நடுத்தெருவிலே நிறுத்தணும்னு நினைச்சான் அந்த தேரழுந்தூரான். அது பலிக்கப் போறதில்லே... ஜாம் ஜாம்னு மஸ்கெட்டுக்குப் போய் பிள்ளையோட இருக்கப் போறேன்னு அவன்கிட்டே போய்ச் சொல்லுங்கோ. வயத்தெரிஞ்சு சாகட்டும் அந்தப் பிச்சைக்கார பய...

*(திரை)*

## காட்சி-21
# ஜயராமன் வீடு

*(சுகுமார் வருத்தத்துடன் உட்கார்ந்திருக்கிறான்.)*

**கௌரி :** ஏன் அதைப்பத்தியே நினைச்சுண்டு உட்கார்ந்திண்டிருக்கேள்? விட்டுத்தள்ளுங்கோ.

சுகு : என் மனசு சமாதானமே ஆகமாட்டேங்கிறது கௌரி. இத்தனை வருஷமா மாமா என்பேர்லே வெச்சுண்டிருந்த அன்பும் பாசமும் பொய்யா?

**கௌரி :** தேள், பாம்பாவது தன் சுபாவத்தை மாத்திக்கும். ஆனா, அப்பாவாலே முடியவே முடியாது. அவர் கல்நெஞ்சுக்காரர். தான்ங்கிற அகம்பாவத்தைத் தவிர அவர் நெஞ்சுலே அன்புக்கோ பாசத்துக்கோ இடமே இருந்ததில்லே. இப்பகூட அவருக்குத் தன் பிள்ளைமேலே ஆசைன்னு நினைக்கிறேளா? ஒரு மண்ணும் இல்லே. இங்கே எல்லாரையும் விரோதிச்சிண்டாச்சு... இனிமே தனியா இருக்க முடியாதுன்னு தெரியும்... அவனோட வெளி நாட்டுக்கு ஓடறேங்கிறார்... சரியான சுயநலவாதி... தூ...

அபி : கௌரி, அப்பாவைப்பத்தி ஒரு பொண்ணு பேசக்கூடாத வார்த்தையெல்லாம் என் எதிர் லேயே பேசறேயம்மா... மனசு தாங்கமாட்டேங் கிறது. உங்கப்பா கிட்டே ஆயிரம் குறை இருந்தாலும் அவர் எனக்கு அண்ணா. ஞாபகம் வெச்சுக்கோ....

கௌரி : போங்க அத்தே! இருபது வருஷமா எங்கேயோ போய் ஒக்காந்திண்டிருந்துட்டு இப்ப புதுசா அண்ணா, அண்ணான்னு உறவு கொண்டாடிண்டு வந்துட்டேள். இத்தனை வருஷமா அப்பா இங்கே பண்ணிட்டிருக்கிற அட்டூழியங்களும் எங்களைக் கொட்டிக்கிற வயித்தெரிச்சலும் உங்களுக்கு எதுவுமே தெரியாது. சித்த பேசாம இருங்கோ...

அபி : எனக்கா தெரியாது? அப்பப்ப யாராவது வந்து எனக்கு எல்லா சேதியும் சொல்லிண்டுதான் இருந்தா... நாள் பூராவும் கண்லே ரத்தம் வழிய அழுதுண்டிருப்பேன் தெரியுமா?

கௌரி : ஏன் அத்தே, அம்மாவையும் இப்படித்தான் பாடாடுத்திண்டிருந்தாரா அப்பா?

அபி : இல்லேம்மா, அப்போ இவருக்கு இந்த மாதிரியா வக்ரபுத்தியெல்லாம் கிடையவே கிடையாது. மன்னி திடீர்னு போன துக்கத்திலேதான் அண்ணாவோட குணங்களெல்லாம் ஒரேயடியா தலைகீழா மாறிடுத்து... ம்... அண்ணா பழையபடி மாறணும்னு இந்த இருபது வருஷமா நான் அம்பாளை வேண்டிக்காத நாளே இல்லை... அப்பாவை நீ திட்டிக் திருத்தலாம்னு நினைச்சே. நான் பிரார்த்தனையாலே மாத்தலாம்னு நம்பினேன். இன்னும் நம்பிண்டிருக்கேன். பகவான் என்னைக் கைவிடமாட்டார்.

(ஜெயராமன் பிரசாத்துடன் வருகிறார்)

ஜெய : பிரசாத் யதேச்சையா நாகராஜராவைப் பார்த்தானாம். அவர்கிட்டேருந்து ஒரு முக்கியமான சீட்டுக் கொண்டு வந்திருக்கான்.

சுகு : என்ன சீட்டு மாமா...?

ஜெய : வாஞ்சிநாதனுக்கு திடீர்னு உடம்பு ரொம்ப சீரியஸாயிடுத்தாம்... எல்லாரையும் உடனே புறப்பட்டு வரச் சொல்லியிருக்கார்.

அபி : ஐயையோ... அண்ணாவுக்கு என்னவாம்?

ஜெய : தெரியலே... அதைப்பத்தி ராவ் ஒண்ணும் எழுதலே... பாவம் திடீர்னு என்னாச்சோ வாஞ்சிக்கு?

கௌரி : அப்பாவை எல்லாரும் தனியா விட்டுட்டு வந்தது தப்பு. நானாவது அங்கே இருந்திருக்கலாம். வாங்கோன்னா புறப்படலாம்...

அபி : நானும் வரேன்... எனக்கு அண்ணாவை உடனே பார்க்கணும் போலேருக்கு... தாயே மீனாட்சி... அண்ணாவுக்கு ஒண்ணுமில்லாம இருக்கணுமே.

கல் : அப்படியெல்லாம் ஒண்ணும் இருக்காது அபிராமி, கவலைப்படாதே. சுகுமாரா, ஒரு டாக்சிக்கு ஏற்பாடு பண்ணு.

சுகு : போஸ்ட்டாபீஸ்கிட்டே ஒரு ப்ரைவேட் டாக்சி நின்னுண்டிருக்குமே, அது இருக்கா பார் பிரசாத்...

பிரசாத் : நான் பார்த்துண்டு வரேன்... நீங்கள்ளாம் ரெடியாயிருங்கோ. (போகிறான்)

(திரை)

## காட்சி-22

# வாஞ்சிநாதன் வீடு

*(எல்லாரும் கவலையுடன் நின்று கொண்டிருக்கிறார்கள். ஜெயராமன் உள்ளேயிருந்து வருகிறார்.)*

**ஜெய** : *என்ன நடந்தது ராவ்?*

**நாக** : *சுகுமார் தன்னைவிட்டுப் பிரிஞ்சுப் போறதைப் பத்தி காத்தாலே மனசு உடைஞ்சு என்கிட்டே பேசிண்டிருந்தார். சமாதானப்படுத்திட்டு வந்தேன்... வந்து சாப்பிட ஒக்காந்தேன்... 'ஐயோ என்னை விட்டுட்டுப் போயிட்டியேடா, உனக்கு எப்படிடா மனசு வந்தது'ன்னு மாமா ஒன்னு கத்திண்டே அழுதிண்டிருந்தார். நான் அலறி அடிச்சிண்டி ஓடி வந்தேன். மாமா குப்புற விழுந்து கிடந்தார். மூஞ்சியைத் திருப்பிப் பார்த்தேன். பேச்சு மூச்சில்லே. நான் ஓடிப்போய் டாக்டரை அழைச்சிண்டு வந்தேன். அவர் ஏதோ இன்ஜெக்ஷன் குடுத்தார். 'இவரோட மனுஷாளை வரவழைச்சுடுங்கோ'ன்னார். உடனே உங்களுக்குச் சொல்லியனுப்பிச்சேன்...*

**ஜெய** : *இன்னும் மயக்கமாயிருக்கிற மாதிரிதான் தோணறது. கூப்பிட்டுப் பார்த்தேன். உடம்பை அசச்சுக்கூடப் பார்த்தேன்... கண்ணைத் திறக்கவேயில்லே...*

**கல்** : *டாக்டர் மறுபடியும் வரேன்னாரா?*

**ராவ்** : *'தூங்கறத்துக்கு இன்ஜெக்ஷன் குடுத்திருக்கேன்... ரெஸ்ட்லேயே இருக்கட்டும், டிஸ்டர்ப்*

புண்ணாதீங்கோ... நா அஞ்சு மணிக்கு வரேன். இம்ப்ரூவ்மென்ட் இல்லாட்டா ஆஸ் பிட்டல்லே அட்மிட் பண்ணலாம்'னு சொன்னார்.

சுகு : என்னாலேதான் மாமாவுக்கு உடம்புக்கு வந்துடுத்து. அவரை விட்டுட்டு நான் தனியா போனதை அவராலே ஏத்துக்க முடியலே... மாமாவுக்கு ஏதாவது ஆயுடுத்துன்னா என்னாலே தாங்கிக்க முடியாதும்மா... (கண்களை கசக்குகிறான். கல்யாணராமன் உள்ளே போகிறார்.)

அபி : பையா, மனசை திடப்படுத்திக்கோ... அதைர்யப் படாதே... குடும்பம் பிரியறதேங்கிற அதிர்ச்சி தான் அண்ணாவுக்கு... வேறே ஒண்ணுமில்லே. எல்லாம் சரியாயிடும். கவலைப்படாதே.

கௌரி : நான்கூட அப்பாவை வாயிலே வந்தபடி திட்டிட்டேன். பாவம், அவர் மனசு என்ன வேதனைப் பட்டிருக்குமோ, எப்படியாவது பொழைச்சு எழுந்தாப் போறும்...

சுகு : மாமாவுக்கு உடம்பு சரியானப்புறம் அவர் கால்லே விழுந்து, எல்லாரும் ஒண்ணா இருந்துடலாம்மா.

அபி : எனக்கு யார் மேலேயும் விரோதம் இல்லேப்பா... நீங்கள்ளலாம் எப்படி முடிவு பண்றேளோ அது எனக்கும் சம்மதம்தான்.

**சுகு** : மாமாவை மஸ்கட்டுக்கு அழைச்சுண்டு போக வேண்டாம்ன்னு நான் கணபதிகிட்டே கண்டிப்பா சொல்லிடப் போறேன்.

(ஜெயராமன் கீழே கிடக்கும் தந்தியை எடுத்துப் படிக்கிறார்.)

**ஜெய** : அட ராமா... இதென்ன அநியாயமாயிருக்கு!

**சுகு** : என்ன மாமா?

**ஜெய** : நேத்து ஒரு ப்ளேன் வெடிச்சு சமுத்திரத்துலே சிதறி, அத்தனை பாஸஞ்சர்ஸூம் போயிட்டான்னு இன்னிக்கு பேப்பர்லே நியூஸ் வந்துதே, அதுலே கணபதியும் இருந்திருக்கான் ஐயய்யோ! அவன் ஃப்ரெண்டு யாரோ தந்தி குடுத்திருக்கான்.

**அபி** : இது பேரிடியான்னா இருக்கு... (தலையில் அடித்துக் கொள்கிறாள்)

**கௌரி** : கணபதி, பத்து வருஷத்துக்கப்புறம் உன்னைப் பார்க்கலாம்னு நினைச்சிண்டிருந்தேனே... தலைலே பெரிய கல்லாத் தூக்கிப் போட்டுட்டுப் போயிட்டியேடா...

**நாக** : அடேடே... சுகுமார் தன்னை விட்டுத் தனியா போறதை நினைச்சுதான் வாஞ்சி அழறார்னு நினைச்சேன். கணபதி போனதை பத்தின தந்தியைப் படிச்ச ஷாக்லேதான் 'என்னை விட்டுட்டுப் போயிட்டியேடா'ன்னு அவர் கத்தியிருக்கார் பாவம்! புத்ரசோகம் சாதாரணமானதா?

சுகு : சே! கணபதி வரப்போறான், என்னை மஸ்கட்டுக்கு அழைச்சுண்டு போகப் போறான்னு எத்தனை பெருமையா சொன்னார்... தந்தியைப் படிச்சுட்டு என்ன பாடுபட்டிருப்பாரோ, பாவம்!

கல் : (உள்ளேயிருந்து வந்து) சுகுமார், மாமா முழிச்சுண்டுட்டார்... கண்லே தண்ணி கொட்றது...

வாஞ்சி : (உள்ளே குரல்) டேய் கணபதி, மஸ்கட்லேருந்து வந்து என்னை உங்கூட அழைச்சிண்டு போறேன்னு சொன்னியே... இப்ப ஒரேடியா போயிட்டியே... நீ போன இடத்துக்கு என்னையும் அழைச்சிண்டு போடாப்பா...

(எல்லாரும் உள்ளே விரைகிறார்கள்)

— நிறைந்தது —

COMICS PDF TIMES
HSC

NOT FOR SALE
FAN MADE ONLY